யிந்சிப்பு, கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய் யிது சமானம் நேர்வாளம் பதிளோரு பங்கு கெந்தகம் பொடி பண்ணி கையாந்தகரைச் சாத்தில் பிசரி வறுத்திச் கொண்டு பறணியிலடைத்து வைத்துக் கொண்டு கல்கண்டாகுதல், பனைவட்டாகுதல், வெண்ணையாகுதல், யிஞ்சிச்சாத்திலாகுதல், வெற்றிலைச் சாறாகுதல், தேங்காய் பாலாகுதல் யிவைகளிலே ஒரு பணவிடை பொடி கூட்டிக் கொள்ள விரோசிக்கும் மோருஞ் சோறுமுண்ண மாகும்.

மூலத்துக்கு

பீர்க்கன் பிஞ்சாகுதல், வாழைப்பிஞ்சாகுதல் உலத்தி சொறித் தவளையைச் கொக்கு உலத்தி யிதுரெண்டும் பொடியும் தேனில் குழைத்து அபானத்தில் ...ட்டி வைக்கவும். மூலரோகந் தீரும்.

வீரியம் :- குன்னி, பொன்னூமத்தை, பிராயன் விரை யிம்மூன்று விரையும் சமானம் சட்டியிலிட்டு கீழே நெருப்பிட்டு கலத்தில் தண்ணீர் வார்த்து சட்டியை மூடி வைக்கத் தயிலம் ஏத் கலத்திலே பத்தினந்த வாங்கி சிமிளிலடைத்து வைத்துச் கொண்டு ஒருமா வெத்திலையில் தடவித் தின்ன லேபனமுண்டு. வீரிய விர்த்தியுண்டு.

சுரக்குளிகை

யிரதம், வெண்காரம், கெந்தகம், அரிதாரம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய், ...வகைக்கு வராகனிடை யொன்று நேர்வாளஞ் சமன் பசுவின் பாலில் கத்தாழஞ் சோத்தில் வேக வைத்து முன்மருந்து கூட்டி கையாந்தகரை சாத்தில் யேழுநாள் தினம் ஒரு சாமம் அரைத்து மிளகு பிரமாணம் குளிகை பண்ணி நிழலுலத்தி வைத்து சுரசிராணி, வயிறுகடுப்புக்கு மோரில் முன்னிடை கொடுக்கவும். அழுக்கடுக்கு ரெண்டரை உண்டை ஆமணக்- -கெண்ணெயில் கொடுக்கவும்.

பாம்புக் கடிக்கு எலுமிச்சம் பழச்சாத்தில் உரைத்து கண்ணிலிடவும். உள்ளுக்கு பனிரெண்டுண்டை குப்பைமேனிச் சாத்தில் கொடுக்கவும். தேள் விஷத்துக்கு யிஞ்சிச்சாத்திலுரைத்து கொட்டின வாயில் தடவி கண்ணுக்கிட விஷமிறங்கும். ..40..

யிந்த உன்டை பசுவின் நெய்யில் கொடுக்க வாய்வு தீரும். கையாந்தகரைச் சாத்திலிட பேய்,பிசாசு தீரும். நொச்சியிலைச் சாத்திலிட சுக்குல பிறமேகம் தீரும். வெள்ளாட்டுப் பாலிலிட குட்டப் பிரமியர் தீரும். உரைத்துக் கண்ணிலிட பேய்,பிசாசு தீரும். நெல்லிக்காய்ச் சாத்திலிட பித்தசுரந் தீரும். நல்ல வெல்லத்தில் கொடுக்க குஷ்டந் தீரும்.

சக்கரையில் கொடுக்க தாபசுரஞ் சகலமுந் தீரும். புளியிலைச் சாத்தில் கொடுக்க உணவி வீடு பொன்னாங்காணிச் சாத்தில் கொடுக்க தீபனமாம். தகரையிலைச் சாத்தில் கொடுக்க தீபனமாம். செரியாக் குணந்தீரும். சுக்கு, மிளகு, திப்பிலியில் கொடுக்கயெல்லா ரோகமுந் தீரும். வெண்ணையில் கொடுக்க யிளைப்புத் தீரும். அம்மான் பச்சரிசி கஷாயத்தில் கொடுக்க உள்பிறமேகந் தீரும். முத்தக்காசில் கொடுக்க திரை செடும். பாக்குடன் தின்ன ராச வசியமுண்டு. தேனில் கொடுக்க உடம்பு வலிப்பு தீரும்.

சுக்கு, கிராம்புடன் கூட்டி அரைத்து தலையில் பூச தலைவலி தீரும். குன்டுமணிச் சாத்திலாகுதல் எலுமிச்சம் பழச்சாத்திலாகுதல். அரைத்து தலையில் பூச ஒருதலைனோவு தீரும். முருங்கைப்பட்டைச் சாத்தில் கொடுக்க வயித்துவலி தீரும். எருமைத் தயிரில் கொடுக்க அனைனாள் செலிற செரியாக் குணம் தீரும். கொதிக்கிநிற பாலில் கொடுக்க அமலை தீரும். புல்லரிசியில் பால் வார்த்தரைத்துக் கொடுக்க சுக்கில பிறமேகம் தீரும்.

புத்திர செவ்விரையுடன் பால் வார்த்தரைத்து கொடுக்க பிள்ளையுண்டாம். வசம்புடன் கொடுக்க சீதம் பாடலாம். சீரகத்தில் கொடுக்க தண்ணீர் தாகந் தீரும். உச்சியில் குடோரியிட சன்னி தீரும். ஊமத்தையிலை வெதுப்பிச் சாறு பிழிந்து உரைத்துக் கண்ணிலிட போம். பசுவின் கோமியத்தில் உரைத்து சிலந்தியில் பூச புண்ணாம். கையாந்தகரையில் கொடுக்க யிருமல் தீரும். இக்கம் இப்படி அநுபானமறிந்துயிடவும்.

சருவ குலாந்தகம்

செந்தகம், யிரதம், சாதிக்காய், சாபத்திரி, லவங்கம், பச்சை சற்பூரம் யிதுக்கு சரி நால நேர்வாளம் யிது குமரிச்சாறு விட்டு மூன்று நாட்களரைத்து பனிப்பயறு பிரமாணம் குளிகை பண்ணி அநுபான விரோஉ*.....ரிகை வைக்க சகல சுரமுந் தீரும். குரு அநுக்கிரகம். சகல மேகத்துக்கும் ருத்திர சடை விரையை யிளநீரில் கொடுக்க சகல மேகமுந் தீரும். ஞானமுண்டாம். மஞ்சள் ....ல சீவி சாயங்காலம் புசிக்கலயத்திலே தண்ணீர் வார்த்து ஊறவைத்து காலமே தெளிவை யிறுத்துக் குடிக்க சகல மேகமும்போம்.

சூலைக்கு மு....த்து முழுங்கப்போம். முருங்கப்பட்டை, உத்தாமணிப்பட்டை யிவையிரண்டும் சமன் அரைத்து கசை பஸ்பம் வைத்துச் கொள்ள சகல சூலையும்போம்.

..வது கலை பஸ்பம் - நேர்வாளம்.

கழிச்சலுக்கு - முருங்கை யீர்க்கு கஉஷாயங் கொடுக்கத் தீரும்.

மேகனாதக் குளிகை

சாதிலிங்கம், வெண்காரம், சுக்கு, மிளகு, திப்பிலி..., சிவதை வேர், வசம்பு, நிலவாமணக்கு, பெருங்காயம், வாய்விளங்கம், ஓமம், குரோசாணி ஓமம் யிவையெல்லாம் ஓரொரு கழஞ்சு, சுத்தி பண்ணின நேர்வாளம் பாதி- െ..... சாறு விட்டு ஒரு சாமமரைத்து குன்றிப் பிரமாணம் குளிகை பண்ணி நிழலுலர்த்தி வெந்நீரிலாதல் தேன் திப்பிலியாதல் அநுபானத்தில் ஒக்கு கொடுக்கவும். தீரும் வியாதி - பெருவயறு, குன்மம், சன்னி, பாண்டு, காமாலை, சுவாசகாசம் ஸ்ரீ .சீரஅறும் தீரும்.

இருமலுக்குச் சூரணம்

கையான் தகரைத் திரிபுரியும்
கதிக்கவோ ரொன்வகை தாறும்
மெய்யாஞ் சோறு னாழியிதில்

மிகுத்த மிளகு நாழிவிட்டு

உய்ய மூனு னாளத்தான்

உகந்த சூரிய புடத்தில்வைத்து

அய்யா சொன்ன கற்சமது

அருளிச் செய்வோம் நாமென்றார். 1.

சங்கு சண்டங் காலியுடன்

தழைத்த சிறுவழுதலையும்

யிங்கு மூனு வேர்ப்பட்டை

யிதுவு மன்றி யினிகேளாய்

பொங்கு விடையம் மரமஞ்சள்

பொருந்துங் கற்கடக சிங்கியுடன்

யெங்கு மென்றி தெற்குவிவை

யியன்ற கோஷ்ட மிவைகேளாய். 2.

நெல்லி கடுக்காய் திப்பிலியும்

தழுத்த வசம்பு சுக்குடனே

யெல்லாம் பதினா வெழுபமாய்

தங்கு மிளகு கூடரைத்து

வல்ல வஜ்ஷய வாராமும்

நெய்தேன் வெருசடி கொள்ள

யெல்லா யிழமல் சேத்துமமும்

யியம்பு மானிடர்க் கில்லையென்றே. 3.

காமாலைக்கு

எருமைச் சானான் தனைப்பிழிந்து

பெருமைப் பாஷந் தான்கூட்டி

எருமை தயிரு மிவழ்னு

யெலங்கப் பத்த நாள்கொள்ள
யுருமைச் சாணார் தீருமைந்தன்
னுன்னுங் சந்தன் பதம்பெத்தாய்
யருமைச் கருமை யிச்குழம்பா
லாறு மெழுவகைச் சாமாலை. 4.

இருமலுக்குச் குடிநீர்

சீமாநெல்லி, கடுக்காய், சிறுதேக்கு, செவியம், ஆடாதோடை, சிறுவழுதிலை வேர், சீந்தித்தண்டு, சுக்கு, மிளகு, திப்பிலி இவை யிருகழஞ்சு கொண்டு யிருநாழிநீர் வார்த்து உழக்காகக் காச்சிக் குடிக்க இருமல், யீளை, யிரைப்பு, வாய் அரிப்பு, நீர்ப்பாச்சல், நெஞ்சுநோவு, குரல்யிடி விழுந்தது யிவையெல்லாந் தீரும்.

பித்தமெடுக்க

வல்லாரையிலை பாலில் குடிக்க னாராய் னாராய் (நாலு நாராய்) வாந்தி பன்னும் மூன்று நாட்கள் கொடுக்கவும். பருத்தியிலைச்சாறும் பாலுமாய் மூன்று நாட்கள் கொடுக்க நிற்கும். நல்ல சுக்கு பலம்-2ர, இந்தப்பு-பலம்-கவ, கடுக்காய் தொன்னூறு கொட்டை தள்ளிப் போட்டு உள்விரை கூட்டிக் கொள்ளவும். யிவையெல்லா மிடித்து வஸ்திரகாயம் பண்ணி தேன், சக்கரை கூட்டிக் கொள்ளவும். தீரும்.

இருமலுக்கு மேகனாதச் சூரணம்

தாளிசபத்திரி-விராகனிடை-1, மிளகு-விராகனிடை-8, சுக்கு-விராகனிடை-6, திப்பிலி-விரகனிடை-4, தவஊசிரி - விராகனிடை-2, லவங்கப்பட்டை-விராகனிடை-2, ஏலம்-விராகனிடை-1, நாட்டுச்சக்கரை-பலம்-3ளு விஊகடுனாதி வரவு யிடித்து சூரணம் பண்ணி சர்க்கரை கூடப் போட்டு கலந்து வைத்துச் சொண்டு ரெண்டு நேரமும் வெருகடி பிரமாணம் சாப்பிடவும். இதுக்குத் தீரும் வியாதி - அதிசாரம், சுவாசகாசம், சன்னிபாதம், பாண்டு,

காமாலை, மேககாங்கை, கால்கையெரிவு, ரத்தபித்தம் முதலான வியாதிகள் தீரும்.

ஏலாதிச் சூரணம்

ஏலம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி, நெல்லிமுள்ளி, தானிக்காய், திப்பிலிமூலம், சாதிக்காய், சந்தனக்கட்டை, கோரைக்கிழங்கு, செங்கழுநீர்க் கோஷ்டம், அதிமதுரம், லவங்கம், யிவை சமபாகம் யிடித்து சூரணம் பண்ணி சரிசக்கரை பசுவின் நெய்யும் கூட்டி காலமே சந்தி (அந்தி, சந்தி) ரெண்டு நேரமும் ...முச் சொடி பிரமாணம் உண்ணவும். இதுக்குத் தீரும் வியாதி - பித்தம், பாண்டுவம், அரோசிகம், சயம், அதிசாரம், குன்மம், சுவாசகாசம், சுரம், அதிசுரம், காமகாசம், அருதேத்திரம் முதலான வியாதிகள் தீரும்.

திராக்ஷாதி சூரணம்

திராட்சைப்பழம், நெல்பொரி, அல்லிக்கிழங்கு, அதிமதுரம், பேரீச்சங்காய், நன்னாரிவேர், கூகைநீறு, விலாமிச்சம் வேர், நெல்லிப்பருப்பு, முத்தக்காசு, சந்தனத்தூள், பூவாதிகிழங்கு, தக்கோல மொட்டு, சாதிக்காய், லவங்கம், லவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை, சிறுநாகப்பூ, திப்பிலி, கொத்தமல்லி யிவையெல்லாம் வகைக்கு அரைப்பலம் விழுக்காடு கொண்டு வந்து யிடித்து சூரணம் பண்ணிக் கொண்டு வித்தி யிந்தச் சூரணம் சமனாகச் சர்க்கரை கலந்து வைத்துக் கொண்டு ரெண்டு வேளையும் வெருகடி பிரமாணம் பசுவின் நெய்யிலே .....வது நாள் கொடுக்கவும். பித்த வாய்வு நாற்பது வகையும் கால்கையெரிவும் போம். அரோசிகம், வாந்தி, யிருமல், ரெத்தபித்தம் யிவைகள் தீரும்.

அசுவாதிச் சூரணம்

சிவதைவேர் சுத்தி பண்ணின பொடி பலம்-1, கடுக்காய் பலம்-1, தானிக்காய்-பலம்-1, சுக்கு-பலம்-1, மிளகு-முப்பலம்-1, நெல்லிப்பருப்பு-

...45..

பலம்-1, சீரகம்-பலம்-1, கொத்தமல்லி-பலம்-1, வாய்விளங்கம்-பலம்-1, திப்பிலி மூலம்-பலம்-1, சக்கரை-பலம்-8 இவையெல்லாஞ் சூரணம் பண்ணி சூரணம் விராகனிடையும் சக்கரை விராகனிடையும் கூட்டிக் கொடுக்கவும். பேதியாம். இதுக்குத் தீரும் வியாதி - பிறமேகம், காமாலை, சோகை, பித்தபாண்டு, சுக்கிலமேகம், சன்னி வாதம் யிவைகள் தீரும்.

எல்லா மேகத்துக்கும் நெய்

சுக்கு, திப்பிலி, மிளகு, கடுகாய், நெல்லிக்காய், தானிக்காய், ஓமம், குரோசானி ஓமம், சீரகம், சாதிக்காய், சாபத்திரி, அரத்தை, அதிமதுரம், வாய்விளங்கம் யிவையெல்லாம் வகைக்கு விராகனிடையும் சக்கரை-பலம்-1, நெய் நாழி கூட்டி நெய்யை அடுப்பில் வைத்து யிந்தச் சூரணத்தை அதிலே கொட்டி லேகியமாகிற பக்குவத்தில் யிறக்கி வைத்துக் கொண்டு வேளைக்கு அரை விராகனிடை சாப்பிடவும். இதுக்குத் தீரும் வியாதி - உள்மேகம், பிறமேகம், கால்கையெரிவு, யிருமல் சகல மேகங்களும் தீரும்.

ஆமணக்கெண்ணெய் - படி -1, யிதை காட்டு பழயெரு முட்டை கொண்டு வந்து முட்டதாளிப் போட்டு யெண்ணையைக் காய வைத்து அதுக்குள்ளே வெள்ளைப்பூண்டு-பலம்-2ம் உப்பு கொஞ்சமும் போட்டு காய்ந்து வருகிற பக்குவத்தில் முடக்கத்தானிலை வேறுமென்றது போட்டு காய்ந்து வருகிற பக்குவத்தில் சமூலமெடுத்து கல்வத்திலிட்டு அரைத்து யெண்ணையில் குழப்பிவிடவும். கால்கை பிடிப்புக்கும் சகல பிடிப்புக்கு விரையங் கொடுக்கவும். யிச்சா பத்தியம். கை கண்டது.

இரத்தக் கழிச்சலுக்கு மருந்து

மாதளங்காய் கொண்டு வந்து பசுவின் சாணியிலே புடம் போட்டு யெடுத்து களிப்பாக்கும் புளியங்கொட்டைத் தோலும் கூட்டி கல்வத்திலிட்டு அரைக்கும்போது சிறுதயமிட்டு அரைத்து காசிக்காய் பிரமாணம் உண்டை பண்ணி மூனுவேளை அஞ்சுவேளை கொள்ளவும். புளிப்பு, கவிச்சி தவிர்க்கவும்.

வேறு

மலராத தென்னம்பாளை கொண்டு வந்து யிடித்து சாறு பிழிந்து கொண்டு அதில் சர்க்கரை கொஞ்சம் கூட்டிக் கொண்டு குடிக்கவும். ரெத்தக் கழிச்சல் மாறும்.

பருத்தியீர்க்கு, மாதளை ஓடு, சீரகம், கொத்தமல்லி, சுக்கு இவை கஉஷாயமிட்டுக் கொடுக்கவும். ரெத்தக் கழிச்சல் மாறும். பத்தியம் –

சீதக் கழிச்சலுக்கு

ஓமம்–பலம்–, கொண்டு வந்து வறுத்துத் தூள் பண்ணி அதில் கிருஉஷ்ணா பட்டணத்து பனைவெல்லாம் கூடப் போட்டு சாப்பிடவும்.

சுத்தியிலை, ஓமம், மிளகு சிவக்க வறுத்துக் கொண்டு தீர் ஆழாக்கு தண்ணீர் வார்த்துக் காச்சி காலாக்காக யிறக்கிக் கொடுக்க சீதக் கழிச்சல் தீரும். பத்தியம்.

பைத்தியம், கால்கை யெரிவுக்குச்சூரணம்

பருத்திக்கொட்டை பலம்–5, நெல்பொரி–பலம்–2, சீரகம்– சீரகம்–பலம்–, லவங்கம்–பலம்–வ, யேலம்–பலம்–வ, சுக்கு–பலம்–, திப்பிலி – பலம்–வ யிவையெல்லாம் பொடி செய்து வஸ்திரகாயம் பண்ணி சக்கரை கூடக் கலந்து தின்ன கால்கையெரிவு பயித்தியம் தீரும்.

வாயாலே ரெத்தம் விழுகிறதுக்கு மருந்து

உழக்கு எள்ளு நாழி பசுவின் பாலில் அரைத்து சக்கரை கூட்டிக் கொடுக்கவும்.

குத்துயிருமலுக்கு மருந்து

தூதுவளை சமூலமிடித்து வஸ்திரகாயம் பண்ணி அதில் திப்பிலி–பலம்–, மிளகு–பலம்–, சீரகம்–பலம்–, சுக்கு–பலம்–வ கூடக் கூட்டி தேனில் குழைத்துத் தின்ன குத்திருமல் தீரும். பத்தியம் – முருங்கைக்காய்,

முருங்கையிலை, மிளகு, தண்ணீர் பண்ணிச் சாப்பிடவும்.

பிள்ளைகளுக்கு வயிற்று கழிச்சலுக்கு மருந்து

சீரகம் பொன்னிறமாய் வறுத்துக் கொண்டு பேய்ப்பாச் சோற்றிலையும், நல்லெண்ணையும் ஊற்றி பொன்னிறமாய் வறுத்துக் கொண்டு பொடி செய்து முலைப்பாலில் குழைத்து வார்க்க நிற்கும்.

வெள்ளைப் பண்டு முளை வாங்கி அரைத்து நல்லெண்ணெய்யில் குழப்பி வார்க்க நிற்கும். கைகண்டது.

ஈளை இருமல்

ஈளையும் முத்தினால் குடிநீர்

கருஞ்சீரகம், திப்பிலி, தாழம்பூ, கொடிவேலி, விலாமிச்சை, கொத்தமல்லி, கடுக்காய், சுக்கு, சீந்திற்தண்டு, சித்தாமுட்டி யிவைகளெல்லாம் கால் பலமாகயெடுத்து யிருநாழி தண்ணீர் வார்த்து உழக்காகக் காச்சி திப்பிலிப் பொடி தூவிக் கொடுக்கவும். யீளை, யிருமல், வயறூதல், காச்சல் யிவையெல்லாந் தீரும்.

வாத பித்த சேத்துமத்தின் குணம்

சேத்தும சுரக் குடிநீர்

சரீரம்னோம், திமிருண்டு, உடம்பு சீத்திருக்கும். யிருமலும் யீளையுமுண்டாயிருக்கும், வாய் தித்திச்சிருக்கும், சுழத்தி வரும், தீக்காய வேண்டியிருக்கும், மலம்விட்டால் ஒருக்கால் கறுத்திருக்கும், ஒருக்கால் வெளுத்திருக்கும், பொன்வலமெத்த யிறங்கும். யிக்குறி கண்டால் நாற்கழஞ்சாக யெடுத்து தகத்திட்டு யிருநாழி நீர் வார்த்து யெட்டொன்றாய்க் காச்சி வடிக ஆத்தி யிருகழஞ்சு தேன் வார்த்துக் குடிக்க மாறும்.

பழங்காச்சலுக்கு ரோக மூலிகை மாத்த

சொன்னைத்தோல், சிறுமூலகம், முத்தக்காசு, கடுகுரோகணி, கடுக்காய் யிவை ஒரொன்று முக்கழஞ்சு தரித்திட்டு ½ யிருனாழி நீர் வார்த்து

வெட்டொன்றாய்க் காய்ச்சி வடித்த திப்பிலி, சருஞ்சீரகம், முக்கழஞ்சு சக்கரையுங் கலந்து குடிக்க மாறும்.

ஆடாதோடைவேர், திரிகடுகு, கண்டங்கத்திரி, சுக்கு, காஞ்சோறி வேர் யிவை ஒரொக்க முக்கழஞ்சு கொண்டு தகத்திட்டு யீராழி நீர் வார்த்து வெட்டொன்றாய்க் காச்சி வடித்த திப்பிலி பொடியிட்டுக் குடிக்க நீர் தேத்தலும் சிம்மல், தலை கிறுகிறுப்பு, மார், தலை னோக்காடு, உள்வெதுப்பும், வெப்புந் தீரும்.

பயித்திய சுரத்தின் குணம்

வாய்கச்சிருக்கும், உடம்பு அழண்டு வரும், வாய் பிய...தம், செவியும் ஜ் உ.....ம் றைாவும், வாயும் உடலும் கசச்சிருக்கும், கன் மஞ்சள் கலந்தாப்போலேயிருக்கும், உள்வுளைடிக்கும் யிது பயித்திய சுரம். யிதுக்குக் குடிநீர் - பர்பாடகம், முத்த... இருவேலி, விலாமிச்சம், சந்தனம், இவை ஒரொக்க முக்கழஞ்சாக எடுத்து தகத்திட்டு முன்னாழி நீர் வார்த்து னாழி நீராய்க் காச்சி வடித்து குளிர ஆத்தி தண்ணீர் குடிக்க மாறும்.

சேத்துமத்துக்குக் குடிநீர்

ஆடாதோடையிலை, வேலிப்பருத்தியிலை, தூ சிவளையிலை, நொச்சியிலை இவையெல்லாமிடித்து சாறு பிழிந்து கொண்டு கடுக்காய், திப்பிலி பொடி செய்து ஒரு காசிடை தேன் விட்டு உள்ளுக்குக் கொடுக்க சேத்துமம் முறியும்.

நாடியறியும் குணம்

நாடி நாலையும் நலம்பெறச் சொல்லுகிறேன்.
தேடலல்லோர் தெளிவுறக் கேளுமே
வாத நாடி வகுப்பைச் சொல்லில்
னோதலே நரியியல் நடைபோல்
பித்தநாடி பிசகற னொந்த
ஒப்ப தறியே நாடி நிற்கும்
வாத னாடி வலுப்பெற நிற்கில்

உதைனோவு உலாவி நிற்கும்
ஐயலநாடி அதீநடை சேட்கில்
தொய்யல் விழிபோல் தொங்கிச் குதிக்கும்.
பித்த னாடி பெருத்து நிற்கில்
மெத்தவும் வேற்கை மேன்மை செய்யும்
ஐய நாடி அசைபெற நிற்கில்
உய்ய தெல்லை உகந்தறி யீதே.
மூளையிற் சுரங்கள் . . . தொடர்ச்சி இல்லை.

சிரந்தி ஓலை சுரப்பான், கருங்கிரந்தி, வாதம் 80க்கும் பெரிய எண்ணெய் வைக்கும்படி

கண்டங்கத்திரி, தூதுவிளை கருநொச்சி, கழச்சியிலை, காட்டுக் குறிஞ்சி, சின்னியிலை, சிறுசெருப்படி, தேத்தானிலை, யிலுப்பை யிலை, கோழியவரை, கையாந்தகரை, சிவனார் வேம்பு, வெள்ளறுகு, அஞ்சிலை, நொச்சியிலை, ஆடாதோடை, சங்கு, தழுதாழை, நீர்முள்ளி, செம்முள்ளி, முருவிலி, சிறுகாஞ்சி, சுடுசுரத்தி, அழிஞ்சி, ஆன் ஆதண்டை, ஊணா, பேய்மிரட்டி, பூவரசு, பேய்முசுட்டை, வட்டகிலுகிலுப்பை, வெள்ளிண்டு, நீர்கடம்பட்டை, செங்கத்தாரிப் பட்டை, நரிவிளாத்திப்பட்டை, வெப்பாலைப்பட்டை, மாவிலிங்கம்பட்டை, சித்திரமூலம், சத்திசாரணைக்கிழங்கு, வெருகங்கிழங்கு, நரளைக்கிழங்கு , நிலவாகைவேர், பிரண்டைவேர், மம.. கிழங்கு, காட்டுக்கரணைக்கிழங்கு, விளக்கெண்ணை படி-1 பட்டை வகைகள் வகைக்கு விராகனிடை-3, பச்சிலை வகைகள் சாறு வகைக்கு படி-வ, முருங்கை கருங்கமுதை லத்திச்சாறு, திருகுகள்ளிச்சாறு, வெள்ளாட்டுச் கோமியம் வகைக்கு படி-வ, பின் கடை மருந்து:-

திப்பிலி, திப்பிலிமூலம், தேசாவரம், கடுகுரோகணி, அரத்தை, சுக்கு கோரோசணை, பூதகரப்பான் பட்டை, கருஞ்சீரகம் கஸ்தூரி மஞ்சள், கடுக்காய், வெந்தயம், ஓமம், சதகுப்பை வகைக்கு வராகனிடை-2, சேங்கொட்டை பலம்-1, பரங்கிப்பட்டை-பலம்-2, அரபொடி-வராகனிடை-1

எலுமிச்சம் பழச்சாத்திலரைத்துப் போடவும். பட்டை வகையும் கடை மருந்தும் பச்சிலைச் சாறு விட்டரைத்து யெல்லாமொன்றாய்க் கூட்டி எண்ணெய் பழகின சட்டியில் விட்டு எரித்து மெழுகு பதத்தில் வடித்து உள்ளுக்கு கால் வீசம் படி எண்ணெய் கொடுக்கவும். வாதம் 80, கருங்கிரந்தி, விஷகரப்பான் வகைகள் சூலை, அண்டவாதம், குன்மவகை, பிள்ளைகள் பிறந்து செத்துப் போவது(போதல்) கர்பந்தரித்து அழிந்து போதல் இவைகளுக்கு மூன்று மாதத்திற்கொரு முறை மூன்று நாட்கள் குடிக்கவும். பத்தியம் - மறுபத்தியத்திலுப்பு வறுத்துக் கூட்டவும். இப்படி அஞ்சு மாதத்திற்கு ஒரு முறை ஏழு மாதத்திற்கு ஒரு முறை இந்தப்படி கொடுக்கவும். மற்ற வியாதிக்கு மூன்று நாட்கள் ஏழுநாட்கள் இந்தப்படி இரண்டு முறை மூன்று முறை குடிக்க முன்சொன்ன வியாதிகள் தீரும். கை கண்டது.

ஏலாதி தைலம்

ஆலம்வேர், அரசம்வேர், அத்திவேர், இந்தி, ஆத்திவேர், கருவேலம் வேர், வெள்வேலம் வேர், நறுவளிவேர், நெல்லிவேர், நாவல்வேர், செங்கிழுவை வேர், பாலைவேர், குளப்பாலைவேர், சிறுகுறிஞ்சாவேர், மாதளைவேர், நீர்கடப்பம்வேர், வெட்டிவேர், வட்டதிருப்பிவேர், வேப்பம்வேர், சித்தாமுட்டி, திப்பிலி மூலம், பேராமுட்டி, தாழைவிழுது, காட்டுமல்லிவேர், சத்தாழை, வில்வவேர், விளாவேர், வாழைத்தண்டு, பொன்னாங்காணி, அமுக்கிராவேர், கோரைக்கிழங்கு, நன்னாரிவேர், தண்ணீர்மிட்டான் கிழங்கு, தாமரை வளையம், வேங்கைமரம், சீதேவி செங்கழுநீர், கடலிராஞ்சி வகைக்கு பலம்-2 64 படி தண்ணீர் வார்த்து கஷாயம் யெட்டொன்றாய்க் காச்சி யிறுத்துக்கொண்டு கற்கம்-மூலம்-பலம்-1, சாதிக்காய், மிளகு, பச்சிலை, பூலாங்கிழங்கு, கொத்தமல்லி, சோம்பு, சதகுப்பை, மஞ்சள், மரமஞ்சள், கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி, சீரகம், அதிமதுரம், செண்பகப்பூ, சிறுநாகப்பூ, வெள்ளரிவிரை, நெருஞ்சிவிரை, பெரும்பூசனிவிரை, குரோசாணி, ஓமம், கஸ்தூரி மஞ்சள், கோஷ்டம், லவங்கம், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், நல்லசந்தனம், மாவின்

வித்து//ல்

வித்து, லவங்கப்பத்திரி, மஞ்திஉட்டி, செவ்வள்ளிக் கொடி, வாலுளுவை அரிசி,

கஞ்சாவிரை, வகைக்கு பலம்-வ, நல்லெண்ணெய்-படி-3, பசுவின் பால்-படி-6,

யிளநீர்-படி-6, கடைச் சரக்கெல்லாம் பசுவின் பால் விட்டரைத்து முன்வேர்

வகைக் கஷாயத்தில் போட்டு கலக்கி எண்ணெயில் யிளநீர் எல்லாம் ஒன்றாய் விட்டுக்

காச்சி மெழுகு பதத்தில் வடித்து வடிகலசத்தில் கோரோசனை, புனுகு, சட்டம்,

குங்குமப்பூ வகைக்கு விராகனிடை-1 பொடி பண்ணி கலசத்தில் போட்டு தயிலத்தை

இறுத்து வைத்துக் கொண்டு முழுசிவரத் தீரும் வியாதி - சயம், இருமல், ஈளை,

கா...., மேகசுரம், நீரிழிவு யின்னமனேக வியாதி தீரும்.

உள்ளுக்கு சூரணம்

ஏலம்-விராகனிடை-1, சோம்பு, அதிமதுரம், சீரகம், கொத்தமல்லி,

சிறுதேக்கு ....ம்பு, மாசக்காய், சிறுநாகப்பூ, லவங்கப்பத்திரி, சன்னலவங்கப்

பட்டை, சாதிக்காய், செண்பக மொக்கு, வெட்டிவேர், விலாமிச்சம்வேர்,

நன்னாரிவேர், முந்திரிகை, , கருவேலம் பிசின், நெருஞ்சிவிரை,

வெள்ளரிவிரை, மாங்கொட்டைப் பருப்பு, நெய் பொரி, ஓரிதழ்தாமரை வகைக்கு

விராகனிடை-1, ஆவாரம்பூ வித்து காஞ்சது பலம்-த், சீந்திச்சக்கரை சுத்தி

பண்ணினது பலம்-1, கற்கண்டு-பலம்-1 இவையெல்லாம் காய போட்டு இடித்து

வஸ்திரகாயம் பண்ணி வைத்துக் கொண்டு ஆவாரைவேர் வேணமட்டுங் கொண்டு வந்து

பொடியாய்த் தறித்து நல்றாயுலத்தி பானையில் நிரம்ப அடைத்து குழித்தயிலம்

வாங்கி வைத்துக் கொண்டு சூரணம் வெருகடியும் அப்பிரகச் செந்தூரம் பணவிடையும்

சருவங்க செந்தூரம் பணவிடையும் தயிலம் ஒரு வராகனிடையும் சேர்த்து இருபது

நாள் கொடுத்துவரத் தீரும் வியாதி.

சூதக வலியைச் சேர்ந்த சகலமான வியாதிக்கும் அவிழ்தம்

பெட்டைக்கோழி விடையாயொன்று கொண்டு வந்து மயிர் மத்ததெல்லாம்

வாங்கிப் போட்டு வயித்தைக் கீறி குடல், யீரல் மத்துங்கலமஉங்களெல்லாம்

நீக்கி தேய்த்து சுத்தமாய்க் கழுவி அமுஞ்சிவேர் மேல் பட்டையை தள்ளிப் போட்டு

அரைத்து ஒரு எலுமிச்சங்காயளவு கோழி வயற்றுக்குள்ளே வைத்து நன்றாய் தைத்து ஒரு சட்டியில் கொஞ்சம் வரகு வைக்கோல் பரப்பி குறுணி தண்ணீர் விட்டு மேல் சட்டி கொண்டு மூடி நன்றாய் வேக வைத்து பிறகு யெடுத்து நன்றாய் அரிந்து நெய், வெங்காயம், நற்சீரகம், கொத்தமல்லி, பெருஞ்சீரகம், சன்னலவங்கப்பட்டை, வால்மிளகு, சிறுநாகப்பூ, திப்பிலி, மிளகு, காட்டுச்சீரகம், சடுகு, சச்சோலம், அக்கிறாகாரம் இவையெல்லாம் வகைக்கு விறாகனிடை- 1 கூட்டி இள வறுப்பாய் வறுத்து தூள் பண்ணி மேல் பொடி தூவி சிவள சமைத்து இறக்கி வைத்துக் கொண்டு சூரஉதயான முதல்நாள் துவக்கி மூன்று நாட்கள் வரைக்கும் அந்தி சந்தி, வேண்டின மட்டும் ஒரு திட்டமாய் சாப்பிடவும். நிற்கும் மருளி.....து இதுக்குத் தீரும் வியாதி - சூதக வாய்வு, சூதகவலி, உதிரசிக்கல், வயத்துக்கட்டி, மலட்டுப்பச்சி, சூதகத்தாலெடுத்த சகல வியாதியும் தீரும்.

<u>சூசிகா வாய்வு இரைச்சல், கழிச்சல் கடுப்புக்கு மருந்து</u>

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிமுள்ளி, தானிக்காய், பெருங்காயம் வகைக்கு பலம்-வ, சுறாக்கு கருவாடு பலம்- ந, மருந்துகளை இளவறலாய் வறுத்திடித்து சூரணம் பண்ணி சுறாக் கருவாட்டை ஊற வைத்து நன்றாகக் கழுவிப் போட்டு குறுணி நறுக்கி சட்டியில் போட்டு படி தண்ணீர் விட்டு நன்றாய் அத்தி மைபோலே வெந்தபிறகு மத்தாலே கடைந்து சூரணம் போட்டு நல்லெண்ணெய் விட்டுப் பிசைந்து லேகிய பதத்தில் கொட்டைப் பாக்கு பிரமாணம் உருண்டை தி உருட்டி ஒரு கலயத்தில் நல்லெண்ணெய் வார்த்து அந்த எண்ணையிலே யிந்த உருண்டையைப் போட்டு வைத்துக் கொண்டு அந்திசந்தி ரெண்டு வேளையும் ஒவ்வொரு உருண்டை சாப்பிட்டு வரவும். தீரும் வியாதி - புளி குடித்த பெண்டுகளுக்கு வருகிற சூசிகா வாயுவுடன் கூடிய சகல வியாதிகளும் தீரும். யிச்சா பத்தியம் - யிது காரைக்கால் முத்தப்பா ஆசாரி மகன் சவரி முத்து செய்து கைகண்டது.

பெருகிய நீலின் கண்ணே
பெருகியே சுழித்தாற் போல
வருகிற வாயிற் தாங்க
வந்தது ...மே யாகுஞ்
செரிரிமணி புவியுள் ளோரே
துயரில்லா தூங்கி னாராய்

வெருவூறு மிடையூ றில்லை

விளம்பினார் மென்மை யோரே.

வியாதி தீரும் தீராததுக் சுடையாளம்

வாத சுரம் பித்தசுரம் சேத்துமசுர மூன்றில்

வகைவகையாய ....வாதபித்தங் கூடில்

பேதமிகு தோஉஷசன்னி பிழக்க வரிது

பித்தமுடன்தான் கூடினால் ஓது சன்னி

வாதசன்னி வகையில்லை வாத சேத்தும

பித்தசன்னி யுரமாகு முரைக்குங் காலை

பேதமற வாதபித்தஞ் சேத்துமஞ் சேர்சன்னி

வாத பித்தம் பேதமிகு நாகபித்

தாந்தமாகுங் காச்சல் பித்தம்

வாதத்துடனே யதிசாரம் பேசில்

தீதகலும் வாதபித்தஞ் சேர்ந்த காச்சல்

சீறுபெத்த சேத்துமஞ் சீறு காச்சல்

வேதினை சேந்தும் சுரமுழுத்த சுரம்நாலும்

விதனமான விஉஷசுரம் விளம்பி னோமே.

சுர வீக்கத்துக்கு

கையாந்தகரை தூதுவிளை

கடிய னொச்சி பிரமியுடன்

மெய்யாய் விளங்கும் நீர்முள்ளி

வீராகிய மல்லிகைத் தண்டு

செய்யார் கரந்தை பேராமட்டி

திகழுஞ் சுக்கு நருக்கியிட்டு

துய்தாய்க் காச்சிக் குடிப்பீராய்

சுரமும் வீக்கமும் போமே.

கிராணி யானந்த வயிரவன்

நாபி லிங்கர் திரிகடுகு

நல்ல விடையம் சமன்கூட்டி

நீதி நிம்பச் சாத்திலரை

நேரே பயிஞற வுண்டைசெய்து

யிஞ்சிச் சாத்தி லிரண்டுண்டை

யிடவே தாப குளிர்சுரம்போம்

பித்த சுரத்துக் கோருண்டை

பேணி யிடுக முலைப்பாலி

லுடம்பு கடுத்த ....

யுரைத்தே முலைப்பால் தன்னிலிடு

கிராணி யான ....

கேளீர் விடையஞ் சாதிக்கா

தயிரில் தேன்தனிற் கொள்பவற்குச்

சுறுவ கிராணியுந் தான்போமே.

சுர ஆனந்த வயிரவன்

சாதிலிங்கம், நாவி, செந்தகம், வெஞ்காரம், சுக்கு, மிளகு, திப்பிலி இவை வகைக்கு விராகனிடை-1, நேர்வாளம் சுத்தி பண்ணினது விராகனிடை-7 இவை எலுமிச்சம் பழச்சாத்திலிரண்டு சாமம் அரைத்து மிளகு பிரமாணம் உண்டை செய்து நிழலுலர்த்தி பயித்திய சுரத்துக்கும் புதுசுரத்துக்கும் பழஞ்சுரத்துக்கும் குளிர் சுரத்துக்கும் யிஞ்சிச் சாத்திலிடவும். தாப சுரத்துக்கு பசுவின் வெண்ணையிலிடவும். சன்னிவாத சுரத்துக்கு யிஞ்சிச் சாத்திலிடவும். சீதாங்க சுரத்துக்கு ஆடாதோடைச் சாத்திலிடவும். வயிறு கழிச்சலுக்கு தேனிலிடவும். மேலிளைப்புக்கு இருமலுக்கு மாடாதோடைச் சாத்திலிடவும். சலக்கழிச்சலுக்கு ஆவாரம்பூ சாத்திலாகிலும் பசுவின் வெண்ணையிலாகிலும்

இடவும்.

இடவும். ஒரு உருண்டை அரை உருண்டை கண்டு கண்டு இடவும். உதிரவியாதிக்கு சுக்குக் குடிநீரிலிடவும். கண் வியாதிக்கு முலைப்பாலிலிடவும். வாதத்துக்கு சித்தாமணக்கு எண்ணெயிலிடவும். தலைவியாதிக்கு அகத்திப்பூமுப்புச் சாத்தில் நசியம் பண்ணவும். ஒரு உருண்டை இரண்டு உருண்டை இதற்குமேல் கொடுக்கக் கூடாது.

மேகனாதன் குளிகை

சாதிலிங்கம், வெண்காரம், இந்துப்பு, பெருங்காயம், சுக்கு, திப்பிலி, வசம்பு, வாய்விளங்கம், ஓமம், சிவதைவேர் இவைகள் சமன் கூட்டி எலுமிச்சம் பழச்சாத்தில் ஒரு சாமமரைத்து குன்றி பிரமாணம் உண்டை பண்ணி நிழலுலர்த்தி வெந்நீரிலோருண்டை இட பஞ்ச குன்மமும் சயமும் பாண்டும் தீரும். திரிதோஷமுந் தீரும்.

சிந்தாமணி மேகநாதம்.

சாதிலிங்கம், வெண்காரம், திரிகடுகு, திரிபலை, இந்துப்பு, வசம்பு, பெருங்காயம், வாய்விளங்கம், ஓமம், குரோசாணி ஓமம் இவைகள் வகைக்கொரு விராகனிடை சுத்தி பண்ணின நேர்வாளம் விராகனிடை- 14 இவையெல்லாம் ஒன்றாய்க் கூட்டி எலுமிச்சம் பழச்சாத்தில் ஒரு சாமம் அரைத்து கடலை பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலர்த்தி ஒரு குளிகை வெல்லத்தில் கொடுக்க விரேசனமாம். பத்தியம் - மோருஞ் சோறும். நெருஞ்சிச் சாத்தில் ஒரு குளிகை கொடுக்க அஞ்சுவகை குன்மமுந் தீரும். பத்தியம் - பசுவின் பாலுஞ் சோறும். ராத்திரிக்கு சீரகக் கஷாயமிடவும். பயித்தியமாய் தலையை சுத்துகிறதுக்கும் நெஞ்சுலர்ந்து வருகிறதுக்கும் கொம்மட்டி மாதளம்பழச் சாற்றில் அஞ்சு நாட்கள் அஞ்சு உருண்டை இடவும். பத்தியம் - பசுவின் பாலுஞ் சோறும்.

இராத மிருதரங்கம்.

பத்திர மண்டூரம் பலம்- 1, சாதிலிங்கம்-விராகனிடை- 2, குங்குமப்பூ-விராகனிடை-3, மலாக்காச் சந்தனப்பொடி-விராகனிடை-5,

வெங்காரம் பொரிச்ச தூள் - விராகனிடை-2 இவையெல்லாம் இளநீர் விட்டரைத்து ஒரு வராகனிடை மாத்திரை கூட்டி வைக்கவும்.

பஞ்சாமிர்தம்

இரசசெந்தூரம்-விராகனிடை-2, திப்பிலி-விராகனிடை-2, ஏலம்-விராகனிடை-2, கற்பூரம்-விராகனிடை-வ, குங்குமப்பூ-விராகனிடை- , கோரோசனை-விராகனிடை-2, அரப்பொடி-விராகனிடை-2, சந்தனப்பொடி-விராகனிடை-1 இவையெல்லாம் ஒன்றாய்க் கூட்டி விலாமிச்சம் வேரிடித்து தண்ணீரிலூறப் போட்டு பிசைந்து அந்த தண்ணீர் விட்டரைத்து ஒரு வராகனிடை மாத்திரை கூட்டி வைத்துக் கொள்ளவும். இனி அனுபானம் -

சுரத்தின் மேற் தாகத்துக்கு - சீரகந் திப்பிலி கூட்டிக் கொடுக்கவும். வெந்நீரிலுங் கொடுக்கலாம். சுவாசகாசங்களுக்கு- தேனுந் திப்பிலியுங் கூட்டிக் கொடுக்கவும்.

மேகங்களுக்கு- திப்பிலி, சீரகம், ஏலம் கூட்டிக் கொடுக்கவும். சமுநீரிலுங் கொடுக்கவும்.

நீரடைப்பு, யெரிவு, சீ விழுகிறதுக்கு ஆடை தள்ளின தயிரில் கொடுக்கவும்.

இரத்த பிரமியத்துக்கு - ஆவாரை அரிசியும் சீரகமும் அரைத்து பாலிலே கொடுக்கவும். தாபசுரங்களுக்கும் யெரிவுக்கும் - ஏலம், திப்பிலி, சீரகம் கூட்டி இளநீரிலிடவும். இதல்லாமல் தாழை விழுதச் சாத்தில் சக்கரை கூட்டி இடலாம். ஒரு நேரத்துக்கு அரை பணவிடை அறியவும்.

பூரண சந்திரோதயம்

இரச செந்தூரம் - பணவிடை-10, கோரோசனை பணவிடை-2, குங்குமப்பூ-பணவிடை-2, மலர்க்காச சந்தனம்-பணவிடை-2 இவை முலைப்பால் விட்டரைத்து தேத்தாங்கொட்டை பிரமாணம் உருண்டை பண்ணி வைக்கவும்.

சிந்தாமணி - இராசமிருகாங்கம் - வசந்த குலமாகரம் - பூரண சந்திரோதையம் - யிந்த நாலுக்கும் அநுபானம் தேனும் திப்பிலியுங் கூட்டி யிந்த நாலு வகையிலேயும் வகைக்கு கால் பணவிடை கூட்டியிடவும். யிந்த நாலு வகையுங் கிடையாவிட்டாலொரு வகையாகிலும் கொடுக்கவும். இதுக்குத் தீரும் வியாதி - பதினோரு வகை சயமும் தீரும். இதல்லாமல் முலைப்பால் பசுவின் நெய் இதுகளிலுமிடலாம். நாற்பது நாளிடவும். பத்தியம் - பால், நெய், பாசிப்பயறு, துவரம் பருப்பு, கீரைத்தண்டு, வெள்ளாட்டுப் பால், இளந்தயிராம். புளி, கடுகு, நல்லெண்ணெய், பெருங்காயமாகாது.

வேறு. பூரண சந்திரோதையம்

இராச செந்தூரம் - விராகனிடை-2, சாதிலிங்கம்-விராகனிடை-2, திப்பிலி-விராகனிடை-4, சாதிக்காய்-விராகனிடை-1, கிராம்பு-விராகனிடை-1, கோரோசனை - விராகனிடை-1, குங்குமப்பூ-விராகனிடை-1, சற்பூரம்-விராகனிடை-1, சந்தனம்-விராகனிடை-1, சாதிலிங்கத்தையும் ராசசெந்தூரத்-தையும் முலைப்பால் விட்டரைத்து பிறகுஎல்லாம் ஒன்றாய்க் கூட்டி யிலாமிச்சம் வேர் தண்ணீர் விட்டரைத்து ஒரு வராகனிடை மாத்திரை கூட்டி வைக்கவும்.

இராசமிருகாங்கம்

சாரத்தம்-விராகனிடை-2, அரைபொடி-விராகனிடை-2, இரசசெந்தூரம்-விராகனிடை-2, குங்குமப்பூ-விராகனிடை-ஏ, சற்பூரம்-பணவிடை-1, கோரோசனை-விராகனிடை-ஏ, சந்தனம்-விராகனிடை-1, திப்பிலி-விராகனிடை-2, ஏலம்-விராகனிடை-2, யிவை கூட்டி இலாமிச்சம் வேர் தண்ணீர் விட்டரைத்து ஒரு வராகனிடை மாத்திரை கூட்டி வைக்கவும். இது ராசமிருகாங்கம். பூரணச்சந்திரோதயம், வசந்த குலமாகரம், இந்த இந்த வகை அநுபானம் இந்த ராசமிருகாங்கத்துக்குமாம்.

விநோத ஆனந்த வயிரவன்

சாதிலிங்கம்-விராகனிடை-1, சாதிக்காய்-விராகனிடை-1, கிராம்பு-விராகனிடை-1, அதிவிடையம்-விராகனிடை-1, வெண்காரம்- ..588.

விராகனிடை-1, யிலவம்பிசின்-விராகனிடை-1, விலவையோடு-விராகனிடை-1, மாதளையோடு-விராகனிடை-1, அபின் மருந்து-விராகனிடை- சாதிலிங்கத்தை மாத்திரம் முலைப்பால் விட்டரைக்கவும். மத்த மருந்தெல்லாம் நெல்லரிசி சமுநீர்விட்டரைத்த கடலை பிரமாணமுண்டை பண்ணி ஒரு நாள் நிழலுலத்தி மறுநாள் வெய்யிலிலே காயவைத்து அதிசாரங் கிராணி சூசிகா வாய்வும் நெல்லரிசிச் சமுநீரிலே காலமே ஒரு உருண்டை யிப்படி பத்து நாளிடவும். சன்னி வாதம், அதிசாரம், தோஉஷமதிசாரங்களுக்கெல்லாம் கைகண்டது. கடுப்புச் குடலேத்தத்துக்குமாகாது.

வயிஉன்ன விரசம்

சாதிலிங்கம்-விராகனிடை-2, கடுகுரோகணி-விராகனிடை-2, சுக்கு-விராகனிடை-2, திப்பிலி-விராகனிடை 2, மிளகு-விராகனிடை-2, வசம்பு-விராகனிடை-1 இவை கூட்டி நமுக்கி சீலையில் முடிந்து கூட்டி நமுக்கி சீலையில் முடிந்து சித்திரமூலம் வேர் பலம்-6 இடித்து ஆறுபடி தண்ணீரில் போட்டு நாலுபடியாகக் காச்சி அந்தக் கஉஷாயத்தை விட்டு இரண்டு சாமமரைத்து அரைத்த மருந்தை சீலைமடித்து தோளாந்திரமாகச் சட்டி ஒரு சாமம் வேக விட்டு திரும்ப சத்து பதம் வர சத்தேயரைத்து உளுந்து பிரமாணம் உண்டை பண்ணி வைக்கவும். வாதசுரத்துக்கும் சேத்தம சுரத்துக்கும் சுக்கு, திப்பிலி, மிளகு கூட்டிச் கொடுக்கவும். பித்த சுரத்துக்கு -

மேக வாய்வுக்கு பரங்கிப்பட்டை ரசாயனம்

பரங்கிப்பட்டை-10, சங்கம் வேர்ப்பட்டை-பலம்-5, பிரப்பன் கிழங்கு-பலம்-2, இடித்து வஸ்திரகாயம் பண்ணிச் கொண்டு பளிங்கு சாம்பிராணி பலம்-6 புதுச்சட்டியில் பொடி பண்ணிப் போட்டு பரப்பி சட்டியின் மேல் துணி வேடு கட்டி சூரணத்தை மேலே பரப்பி மேல் சட்டி கொண்டு மூடி பொறை போகாமல் சீலைஞ் செய்து அடுப்பில் வைத்து விளக்குபோல் எரியிட்டு சாமம் எரித்து எடுத்து ஆறவிட்டு வைத்துச் கொண்டு மூவிரல் கொண்டது வேளைக்கு,

ரெண்டு வேளையும் சர்க்கரையில் தேனில் வெள்ளீரில் திண்ணவும். மேக வாய்வுகள், சூலைகள், பிடிப்புகள், மார்னோவுகள் இவைகளெல்லாந் தீரும்.

வாதம் 84க்கும் சூரணம்

பரங்கிப்பட்டை, அமுக்கிரா, முருங்கைவேர்பட்டை, பொனலித்தண்டு, மிளகரணை, கோரைக்கிழங்கு, நல்வாரி வகைக்கு பலம்-1 காய வைத்து இடித்து வஸ்திரகாயம் பண்ணிக் கொண்டு திரிகடுகு, திரிபலை, ரேனுகம், சோம்பு, சீரகம், வால்மிளகு, அண்ணாசிப்பூ, லவங்கம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, கசகசா, நாகேசரம், த/ தாளிசபத்திரி, செண்பகப்பூ, சாதிக்காய், மதுரம், சடாமஞ்சிள் வகைக்கு பலம்- இடித்து வஸ்திரகாயம் பண்ணிக் கொண்டு ரெண்டும் ஒன்றாய்ச் சேர்த்து வெள்ளைச் சக்கரை-பலம்-10, பொரித்த வெங்காரம்-பலம்-வ இவைகளையும் போட்டு மூவிரல் கொண்டு வேளைக்குத் திண்ணவும். வாத ரோகங்கள், பித்த ரோகங்கள் சகலமுந் தீரும்.

லேகியம்

புளியாரைச்சாறு, நாயுருவிச்சாறு, பசரிச்சாறு வகைக்கு ஆழாக்கு-, நாட்டுச்சக்கரை-பலம்- , பசுவின் நெய்... சாதிக்காய், சாபத்திரி, லவங்கப் பட்டை, ஏலம், அதிமதுரம், திரிகடுகு, சீரகம், சோம்பு, புடுத்துக்கால் சோம்பு, வெப்பாலை அரிசி வகைக்கு பலம்- , வஸ்திரகாயம் பண்ணிக் கொண்டு கம்பு பொருமா-பலம்-2, மஞ்சிலிக்கான விரை-பலம்-3 வஸ்திரகாயம் பண்ணி யிவைகளெல்லாம் பதத்தில் லேகியம் பண்ணிக் கொண்டு வேளைக்கு கெச்சக்காய் பிரமாணம் ரெண்டு வேளையுந் திண்ணவும். சகல மூலரோகங்களுந் தீரும். யிச்சாபத்தியமாய் வரவும்.

வெள்ளைக்கு மூலிகை

சங்கிலை அரைத்து வேளைக்கு புன்னைக்காயளவு அஞ்சு நாட்கள், ஏழு நாட்கள் திண்ணவும். யிச்சாபத்தியம்.

வேறு

வேலிப்பருத்தியிலையை அரைத்து புன்னைக்காய் பிரமாணம் இவளைக்கு

ஏழுநாட்கள் ஒன்பது நாட்கள் தின்னவும். சுழும் பத்தியம். தீரும்.

வேறு

ஓரிலைத் தாமரையை பிடுங்கி பிடிபோதம் வேளைக்கு காலமே பத்துனாள்த் தின்னவும். தீரும்.

வேறு

முடக்கொத்தானிலையும் கொத்தானும் சமனாக அரைத்து காலமே சின்ன எலுமிச்சங்காயளவு ஒருவேளைக்கு யேழுநாள் தின்னவும். மிச்சாபத்தியமாய் வரவும். கை கண்டது. மேகங்களெல்லாந் தீரும்.

கிரந்திக்கு என்னெய்

ஆமணக்கென்னை-படி- , ஊத்தாமணிச் சாறு, நுணாயிலை, பீனாரிச்சங்கு, பொன்னைகத்தியிலை, வல்லாரி இலை வகைக்குஆழாக்கு-தெ, பதகரப்பான்பட்டை, செம்பூரான்பட்டை, பரங்கிப்பட்டை, கருஞ்சீரகம், ஓமம், கடுகுரோகணி, வசம்பு, பூண்டு இவைகளெல்லாம் போட்டு சூரியபுடம் றெண்டு நாட்கள் வைத்து பதத்தில் காய்ச்சி காலமே ஒரு கரண்டி அஞ்சு நாட்கள் ஏழு நாட்கள் ஒரு வேளை கொடுக்கவும். பத்தியம் - கவிச்., புளிப்பு, தள்ளவும். தீரும் வியாதி - கிரந்திபுண் சூலைகள், கைகால் பிடிப்புகள், நீர்சுருக்கு தீரும். விளக்கென்ணை தலையில் தேய்த்து தலை முழுகிவரவும்.

புண்மேலே பூச விளக்கென்ணை படி-வ, பழவெங்காயச்சாறு ஆழாக்கு-எ, ரசகற்பூரம்-விராகனிடை-1, கெந்தகம்-பலம்-வ, செம்பூராம் பட்டை, வசம்புகபலம்-வ, பூண்டு-பலம்-ஒ இவைகளைப் போட்டு பதத்தில் காச்சி வைத்துக் கொண்டு ரணங்களுக்குப் பூசவும்.

புளியிலைக் காச்சுத் தண்ணீர்விட்டு கழுவிப் போட்டு என்ணை பூசவும். 6,7 நாட்கள் பூசும்போது குருத்தியென்னை கொடுக்கவும். 3,5நாட்கள் கொடுக்க ரணங்காய்ந்து போன பிறகு தலை முழுகு நெய், நல்லெண்ணெய், விளக்கென்னெய் சமன் கலந்து சூரிய புடமாக வைத்து தேய்த்துக் கொண்டு

சியக்காய் விட்டு முழுகவும்.

கருங்கிரந்திக்கு எண்ணெய்

ஆமணக்கெண்ணெய்-படி-1, சித்தாமணக்கெண்ணெய்-படி-, விழுதியிலை-அழிஞ்சியிலை, நுணாயிலை, பீனாரி சங்குயிலை, அமுவதாயிலை வகைக்கு சாறு ஆழாக்கு, பரங்கிப்பட்டை, பூதகரப்பான்பட்டை, செம்பூரம்பட்டை, அமுக்கிராக் கிழங்கு, சங்கம்வேர் வகைக்கு பலம்-1, இவைகளை யிடித்து ரெண்டுபடி தண்ணீர் வார்த்து உழக்காகக் காச்சி ஒன்றாகக் கலந்து சூரியபுடம் மூனு நாள் வைத்து கடைமருந்து- சாதிக்காய், ரோகணி, கருஞ்சீரகம், பரங்கப்பிபட்டை, வில்வபத்திரி வேர், கொஞ்சிவேர், நிலக்கடம்பு வேர், ஓமம், வசம்பு, பூண்டு வகைக்கு பலம்- யிவைகளை யிடித்து கூடப் போட்டு பதத்தில் காச்சி கடுகு திரண்டு வரக் காச்சி வைத்துக் கொண்டு காலமே ஒரு கரண்டி யேழு நாட்கள் கொடுக்க கிரந்தி, புண், கருங்கிரந்தி தீரும். கடும் பத்தியம்.

அரையாப்புக் கட்டிக்கு எண்ணெய்.

வல்லாரையிலை, வில்வப்பத்திரியிலை, ஆகாசத்தாமரை, நுணாயிலை வகைக்கு சாறு-ஆழாக்கு, கருஞ்சீரகம்-பலம்-3 கஷாயம் வைத்து ஆழாக்காக காச்சி விளக்கெண்ணை படி-1 இவைகளைச் சேர்த்து சூரியபுடம் ரெண்டு நாட்கள் வைத்து சாதிக்காய்-பலம்- , சீனப்பட்டை-பலம்-ற, பரங்கிப்பிபட்டை-பலம்-, பூதகரப்பான்பட்டை-பலம்-வ, செம்பூராம்பட்டை-பலம்-வ, அமுக்கிரா-பலம்-1, கருஞ்சீரகம்-பலம்-வ, வெள்ளைப்பூண்டு-பலம்-வ. கடுகுரோகணி-பலம்-வ இவைகளைக் கூடப் போட்டு பதத்தில் காச்சி வைத்துக் கொண்டு காலமே ஏழு நாட்கள், ஒன்பது நாட்கள் கொடுக்கவும். யிதுக்குத் தீரும் வியாதி - வெள்ளை, புண், சொரி, சிரங்கு, அரையாப்புக் கட்டிகள் யிவைகளெல்லாந் தீரும். கவிச்சு, புளிப்பு, கசப்பு தவிர்க்கவும்.

கள்ளி சுட்ட சாம்பலும் தேனுமிழைத்த கட்டியின் மேலே பூசவும்.

கரிசலாங்கண்ணி இலையை விளக்கெண்ணையில் வைத்துக் கட்டியின்

மேலே ஒத்தடம் போட்டு வைத்துச் சுட்டவும். 5,5,3 நாட்கள் சுட்டவும்.

உஷ்ண வாய்வுக்கு

சீரி இருவரும் சிறந்த மூவரும்
கூறிய ஒருவரும் கொடிய சாயமும்
ஊட கூடிய அசம தாசமும்
நேருடன் கூடிய நெருப்போ டொக்குமே.

உஷ்ண வாய்வுக்குச் சூரணம்

திரிகடுகு, சீரகம், கருஞ்சீரகம், ஓமம் வகைக்கு பலம்-1, இவைகளை வறுத்து வஸ்திரகாயம் பண்ணிக் கொண்டு காயம்-பலம்-வ சுட்டு பொடி பண்ணி யிந்துப்பு-பலம்-வ பொடி பண்ணி பனைவெல்லம்-பலம்-5 கூடச் சேர்த்து வேளைக்கு மூவிரல் கொண்டது தின்ன 7-11 நாட்கள் உஷ்ண வாய்வுகள் வயிறு இரைச்சல், அக்கினிமாந்தம், வயிறு கழிச்சல், அசீரணம், அரோசிகம் தீரும். இச்சாபத்தியம்.

மேகக் கடைச்சலுக்கு

பாற்பு, சலாப்பு, கப்பல் சிவதை, சூரத்து நிலாவாரை, பொரித்த வெண்காரம் வகைக்கு பலம்-1 வஸ்திரகாயம் பண்ணி கோதுமை மாவு பலம்-வ கல்வத்தில் போட்டு துளசியிலையும் ஓமமும், சியாழம் வைத்து யிது விட்டு சாமமரைத்து தூதுவிளங்காய் பிரமாணம் உண்டை பண்ணி நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு வேளைக்கு ஒரு உருண்டை வெந்நீரில் யேழுநாட்கள் ரெண்டு வேளையும் அல்லது ஒன்பது நாட்கள் தின்னவும். நாலு நாட்கள் பொறுத்து தலைமுழுகி வரவும். விளக்கெண்ணை, நல்லெண்ணெய், நெய் சமன் கலந்து சூரிய புடம் வைத்து யிலுப்பைச் சட்டி தேய்த்து முழுகவும். மறுநாள் எரிபாகலிலைச் சாறும் பசுவின் பாலும் கலந்து மூணு காலமே கொடுக்கவும். இச்சாபத்தியம். மேகவாய்வு, மேகசூலை, குடைசசல், முடக்குவாதம், பித்தவாய்வு இவைகள் தீரும்.

மேக வாய்வுக்கு கெந்தக ரசாயனம்

கெந்தகம்-பலம்-10 கரண்டியில் உருக்கி விளக்கெண்ணையில் மூனு நேரம் சாய்க்கவும். சுத்தியாம். கல்வத்தில் போட்டு அரைத்து மெல்லிசு துணி மூனு துண்டிலே கெந்தகத் தூளை பரப்பி மூன்று திரி திரித்து பசுவின் நெய்-உழக்கு. அதில் திரியை ஊற வைத்து மூன்று நாட்கள் பெரிய அகலில் கொளுத்தி அதன்மேல் நெய்யை துளிதுளியாய் விட்டு கீழே வசிப்பிங்கான் வைத்து மூனு திரி ஆக மட்டும் நெய்யும் விட்டு ஆன பிற்பாடு பியோலில் வார்த்து வைத்துக் கொள்ளவும். அந்தத் தயிலத்தை சர்க்கரையில் பொரிமாவில் தேனில் ஆன பிலனறிந்து 3,5 துளி விட்டு வியாதி அறிந்து கொடுக்கவும். 15 நாட்களும் வியாதி பார்த்துக் கொடுக்கவும். பத்தியம் - நல்ல சாப்பாடு சாப்பிடவும். மருந்து விட்ட பிறகு நெய் தேய்த்து தலையில் சீயக்காயிட்டு முழுகவும். இச்சாபத்தியமாய் வரவேண்டியது. தீரும்.

அதிவாதி விரேசனம்

சூரத்து நிலாவாரை, கப்பல் சிவதை, கடுக்காய்ப்பிஞ்சு, சலாப்புறு பாற்பு, நெல்லிமுள்ளி வகைக்கு பலம்-2, வஸ்திரகாயம் பண்ணி வைத்துக் கொண்டு சக்கரையில் வெந்நீரில் சுக்கு சீரகக் கியாழத்தில் மூவிரல் கொண்டு கொடுக்கவும். இச்சாபத்தியமாய் வரவும். வாதநீர், பித்தநீர், சிலேட்டுமநீர் இவைகளெல்லாந் தீரும். சுகபேதி.

வேறு

நெல்லியிலை யீர்க்கு கொண்டு வந்து ஒருபடி தண்ணீர் வார்த்து ராவுக்குக் காச்சி காலமே உழக்காக யிறக்கி ஒரு கரண்டி விளக்கெண்ணை சட்டியில் வார்த்து வெள்ளைப்பூண்டு கூடப்போட்டு வதக்கி தாளிதம் பண்ணிச் சாப்பிடவும். நன்றாக பேதியாம். யிச்சாபத்தியமாய்ச் சாப்பிடவும். பித்த பிறரோகங்கள் தீரும்.

இரத்த பிரமியத்துக்கு

ஆவாரங்கொழுந்து, நாகல்கொழுந்து, மான்கொழுந்து சமன்

ளீ கூட்டி அரைத்து பின்னைக்காயளவு வேளைக்கு சிங்கி பஸ்பம் பணவிடை வைத்து ரெண்டு வேளையும் எருமைத் தயிரில் பத்து நாட்கள் கொடுக்கவும். கவிச்சு, புளிப்பு தள்ளிப் போடவும். தீரும்.

<u>வேறு</u>

ஆவாரை வேர்ப்பட்டை, பலம்-10, தண்ணிமிட்டான் கிழங்கு-பலம்-5, சத்திசாரணைக்கிழங்கு-பலம்-3 காயப்போட்டு வஸ்திரகாயம் பண்ணி ரெண்டும் ஒன்றாய்ச் சேர்த்து சர்கண்டு தூளில், நெய்யில், தேனில் ரெண்டு வேளையும் மூவிரல் கொண்டது. பத்து நாட்களுக்குக் கொடுக்கவும். இச்சாபத்தியம்.

<u>பித்தத்தால் இருமலுக்கு</u>

சீரகம்-பலம்-10, முசுமுசுக்கை, பொன்னாங்காணி, கரிசலாங்கண்ணி, எலுமிச்சம்பழம், வில்லைபத்திரியிலை வகைக்கு சாறு ஆழாக்கு- , இந்த சாத்தில் மூன்று நாட்கள் சீரகத்தை ஊறவைத்து நிழலுலத்தி இடித்து வஸ்திரகாயம் பண்ணி கல்கண்டு-பலம்-5 பாவுக்காச்சி பசுவின் நெய்-பலம்-5, கோரோசனை-விராகனிடை-1 இவைகளெல்லாம் பதமாயச் சேர்த்து லேகியம் பண்ணி வேளைக்கு செச்சக்காய் அளவு இருபது நாட்கள் தின்னவும். ஈளை, பிருமல், புகைச்சல், மார்னோவு, அக்கினிமாந்தம், அரோசிதம், புளித்தேப்பம், ஓக்காளம், அதிசாரம், அன்னதிரோஷம், வயிறு உப்புசம், சீதக்கழிச்சல், விஷபேதி யிவையெல்லாம் தீரும்.

<u>வாதத்தால் இருமலுக்கு</u>

இஞ்சி-பலம்-1, மிளகு-பலம்- ரெண்டையும் வறுத்து அரைத்து தண்ணீர் விட்டு ஆழாக்காகக் காச்சி ரெண்டு வேளையும் கல்கண்டு கூட்டில் போட்டுக் குடிக்கவும். அஞ்சு நாட்கள் ஏழு நாட்கள் கொடுக்கவும். இருமல் தீரும். இச்சாபத்தியம்.

<u>வேறு</u> திரிகடுகு வறுத்து பொடி பண்ணி சிங்கிபஸ்பம் பணவிடை வேளைக்குச் சேர்த்து தேனில் மத்திச்சு ரெண்டு வேளையும் பத்து நாட்கள்

கொடுக்க வாதத்தாலெழுந்த யிருமல், சிலேட்டும முறைக்காச்சல் தீரும்.

வேறு முசுமுசுக்கைச் சாறும் பசுவின் பாலும் சமன் கலந்து யெழுகாலமே குடிக்கவும். இச்சாபத்தியம். தீரும்.

சிலேட்டுமத்தால் இருமலுக்கு

இஞ்சி-பலம்-10, எலுமிச்சம் பழச்சாறு-பலம்-10 ரெண்டையும் அரைத்துக் கரைத்து வடிகட்டி கல்கண்டு-பலம்-8, பசுவின் நெய்-பலம்-7, கோரோசனை-விராகனிடை-1 திரிகடுகு, திரிபலை, தேத்தான்விரை, வெள்ளரிவிரை மஞ்சில்கான்விரை, ஏலம், சீரகம், வால்மிளகு, கூகைநீறு, சந்தனம், லவங்கப்பட்டை, லவங்கம், சாதிக்காய், சாபத்திரி, நன்னாரி, வில்வவேர் வகைக்குப்- பலம்-வழு வஸ்திரகாயம் பண்ணி பதமாய் லேகியம் பண்ணி கொடி முந்திரிகைப்பழம்-பலம்-3 கூடப்போட்டு கெச்சக்காய் பிரமாணம் யிருவதுநாட்கள் தின்னத் தீரும். இருமல் - க்ஷயம், சுவாசகாசம், பித்தம், வாதம் மூறச்சை வாய்வு இவைகள் தீரும். இச்சாபத்தியமாய் வரவேண்டியது.

சிங்கி பஸ்பம்

கலைமான் கொம்பு பொடியாக உடைத்து கைத்தாழை மடலில் சொருகி முழப்புடம் போடவும். எடுத்து கல்வத்தில் போட்டு மடல்சாறு சாமமரைத்து வில்லை தட்டி காயவைத்து புடம் போடவும். இந்த பஸ்பத்தை மேகங்களுக்குஞ் சுரங்களுக்கும் சயத்துக்கும் வயிறு கண்டிப்புக்கும் மார்னோவுக்கும் பித்த வாய்வுக்குப் நெஞ்சில் கபத்துக்கும் கொடுக்கவும். தீரும். இச்சாபத்தியம்.

வேறு

நாகேசுரம்-பலம்-3 நெய்யில் வறுத்து வஸ்திரகாயம் பண்ணி வைத்துக் கொண்டு வயிறு கடுப்புக்கு மூவிரல் கொண்டது கல்கண்டு பொடியில் சேர்த்துக் கொடுக்கவும். சுனமாந்தம், கழிச்சல், கடுப்பு, மூலவாய்வு இவைகள் தீரும்.

ரெத்த பித்தத்துக்கு

ஆட்டு மூளையைக் காலமே ஒன்று பச்சையாய் விழுங்கிவிடவும். அஞ்சு காலமே தின்னவும் நிற்கும்.

வேறு

பச்சை நன்னாரிவேர், முசுமுசுக்கைவேர், மசிரம், சந்தனம், லவங்கப்பட்டை, திராய்வேர் யிவை வகைக்கு பலம்-1 வஸ்திரகாயம் பண்ணி பசுவின் பாலில் ஆழாக்கு மூவிரல் கொண்டசி போட்டு அரை ஆழாக்காய்ச் சாச்சி காலமே அஞ்சு நாட்கள் கொடுக்கவும். ரெத்தபித்தம், காசம், க்ஷயம், யிருமல், வாந்தி, விக்கல், உப்புசம், மேல்சுவாசம், வயிறு கழிச்சல் இவைகளெல்லாந் தீரும். யிச்சா பத்தியம்.

பிற மேகத்துக்கு லேகியம்

தண்ணீர்விட்டான் கிழங்கு, மெருகன்கிழங்கு, சத்திசாரணைக்கிழங்கு, நெய்ச்சிட்டிக்கிழங்கு, தாமரைக்கிழங்கு - வில்லைவில்லையாய்க் காயப் போட்டு வஸ்திரகாயம் பண்ணி பரங்கிப்பட்டை, சறுவாப்பட்டை, சிங்கிஉதப்பட்டை, முத்தக்காசு, நன்னாரி, வெப்பாலை அரிசி, வாலுளுவை அரிசி, கசகசா, லவங்கம், வால்மிளகு, திரிகடுகு, திரிபலை, ஏலம், மசிரம், சந்தனம், தேவதாரம், நிலப்பனைக்கிழங்கு வகைக்கு பலம்- , வஸ்திரகாயம் பண்ணி நாட்டுச் சக்கரை-பலம்-10, நெய்-பலம்-7 இவைகளை பதமாய் லேகியம் பண்ணி வைத்துக் கொண்டு முன் கிழங்கு வகைக்கு பலம்- கெச்சக்காய் பிரமாணம் வேளைக்கு அப்பிரக செந்தூரம் பணவிடை லேகியத்தில் வைத்து அஞ்சு நாட்கள் பத்து நாட்கள் தின்னவும். தீரும்.

மேகத்துக்கு எண்ணெய்

ஆமணக்கெண்ணை - படி-1, விழுதி, பிரமிபூண்டு, அழிஞ்சியிலை, வேலிப்பருத்தி, பொடுதலை, பீனாரிசங்கு, துளசி, கற்பூரவள்ளியிலை, அகத்தியிலை,

வகைக்குச் சாறு ஊறாக்கு யிவைகளை யெண்ணையில் கலந்து மூன்று நாட்கள் வைத்து பரங்கிப்பட்டை, பூதகரப்பான் பட்டை, செம்பூராம்பட்டை, அமுக்கிறா, மோகனகிழங்கு, கருஞ்சீரகம், ஓமம், ரோகணி, வசம்பு, பூண்டு வகைக்கு பலம்-வ, சாதிக்காய்-பலம்- யிடித்துச் கூடப் போட்டு பதத்தில் கருகு திரளக் காச்சியிறக்கி வைத்துக் கொண்டு சாதிக்காயை பொடி பண்ணி ஒ௴ குடுவையில் போட்டு என்ணெய் இறக்கினவுடனே குடுவையில் வடித்து வைத்துச் கொண்டு காலமே கரண்டி ஏழுநாட்கள் ஒன்பது நர்டகள் கவிச்சு, புளிப்பு தள்ளி வர மேகங்களெல்லாந் தீரும்.

<u>சூதக வாய்வுக்கு சௌபர்க்கிய சூரணம்</u>

திரிகடுகு, சீரகம், சோம்பு, புடுத்தக்கால் சோம்பு, கொத்தமல்லி, மதுரம், லவங்கம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சாதிக்காய், சாதிபத்திரி, சோறைக்கிழங்கு, வெட்பாலையரிசி, கசகசா, கடுக்காய், சடாமாஞ்சில், பச்சிலை, சிச்சிலிக்கிழங்கு. நன்னாரி வகைக்கு பலம்-ந வஸ்திரகாயம் பண்ணி கல்கண்டு பலம்-7 கூட்டி மூவிரல் கொண்டது பதினஞ்சு நாட்கள் இரண்டு வேளையும் தின்னவும். சூதக வாய்வு, மார்னோவு, மயக்கம், தலைநோவு, பிடரியிசிவு, கனப்பு, வயிறிரைச்சல், கழிச்சல், வயிறு குத்தல், பிடரி நரம்பு யிழுப்பு இவைகளெல்லாம் தீரும். யிச்சா பத்தியம் - வரவேண்டியது. மருந்துண்ணும் போது ரெண்டு தரம் தலை முழுகவும்.

<u>சூதக வாய்வுக்கு என்ணெய்.</u>

விளக்கெண்ணெய்-படி-1, சித்தாமணக்கெண்ணெய்-படி-வ, இலுப்பை என்ணெய்-படி-வ, பீனாரிச்சங்கயிலை, உத்தாமணியிலை, முடக்கொத்தான், கண்டங்கத்திரியிலை, பொடுதலை, ஆனைநெருஞ்சியிலை, தௌசியிலை, வல்லாரை, வில்வப்பத்திரியிலை வகைக்கு படி-ப கலந்த சூரியபுடம் ரெண்டுநாள் வைத்து அமுக்கிறா, பரங்கிப்பட்டை, சாதிக்காய், கார்போக அரிசி, கருஞ்சீரகம், ஓமம், வசம்பு, செம்பூராம்பட்டை ரோகணி இவைகளை இடித்துக் கூடப் போட்டு

சடுகு திராக்ஷ சாக்சி வைத்துக் கொண்டு காலமே ஒரு கரண்டி அஞ்சு நாட்கள், யேழு நாட்கள், ஒக்பது நாட்கள், பத்து நாட்கள் கொடுத்து வரவும். பத்தியம் - கவிச்சு, புளிப்பு, கசப்பு இவைகளை தள்ளிப் போடவும். சூதக வாய்வுகள் தீரும்.

தாளிசபத்திரி சூரணம்

தாளிசபத்திரி பலம்-2, திரிகடுகு, திரிபலை, லவங்கம், லவங்கப் பட்டை, லவங்கப்பத்திரி, வால்மிளகு, சடாமாஞ்சில், கசகசா, ரேணுகம், வாய்விளங்கம், மதுரம், கோஉஷ்டம், சாதிக்காய், சுருள் லவங்கப்பட்டை, ஏலம், நன்னாரி, சீரகம், சோம்பு, கருஞ்சீரகம், பரங்கிப்பட்டை, முத்தக்காசு, சந்தனம், தேவதாரம், சிறுதேக்கு, நாய்க்கடுகு வகைக்கு பலம்-ற வஸ்திரகாயம் பண்ணி பொரித்த காரம் பலம்- , சேர்த்து வைத்துக் கொண்டு ரெண்டு வேளையும் மூவிரல் கொண்டது வியாதி அறிந்து சக்கரை, தேன், நெய், என்ணெய், முலைப்பாலில், வெள்ளாட்டுப் பால், பசுவின் பால், வெள்ளாட்டுக் கோமியத்தில் வியாதியறிந்து அநுபானத்துடனே கொடுக்கவும். தலைக்கு - நெய், நல்லெண்ணெய், சித்தாமணக்கு என்ணெய் சமன் சேர்த்து முழுகி வரவும். இச்சாபத்தியம்.

தாளிசபத்திரி லேகியம்

தாளிசபத்திரி பலம்-3, திரிகடுகு, திரிபலை, லவங்கம், சாதிக்காய், சாபத்திரி, ஏலம், வால்மிளகு, கசகசா, அதிமதுரம், ரேணுகம், நாகேசரம், நன்னாரி, வெட்பாலை, அமுக்கிறா, இருவேலி, சந்தனம், செண்பகப்பூ, திப்பிலி மூலம், வாய்விளங்கம், செஞ்சந்தனம், சோம்பு, கொத்தமல்லி, கருஞ்சீரகம், கூகைநீறு வகைக்கு பலம்-ல வஸ்திரகாயம் பண்ணி நாட்டுச் சக்கரை பலம்-12, நெய்-பலம்-7, திவதாக்ஷிப்பழம்-பலம்-3, பொரித்த வெண்காரம்-பலம்-வ இவைகளைப் பதமாய் லேகியம் பண்ணி வைத்துக் கொண்டு வேளைக்கு கெச்சக்காயளவு 10 நாட்கள், 20 நாட்கள் வியாதிக்காறனை பார்த்துக் கொடுக்கவும். மேகச்சூடு அஉஷ்திசுரம், அன்னதிரேஉஷம், அரோசிகம், ஒக்காளம், வாந்தி,

பித்தவாதம், சிலேட்டுமம், வயிறு உப்புசம், விக்கல், சொரி சிரங்கு இவைகளெல்லாந் தீரும். இச்சாபத்தியமாய் வரவும்.

நெல்லிக்காய்த் தயிலம்

நெல்லிக்காய்ச்சாறு-படி-1, நாரத்தம் பழச்சாறு-படி-௰, வல்லாரை, பொன்னாங்கண்ணி, கரிசலாங்கண்ணி, வில்லபத்திரி, முசுமுசுக்கை வகைக்கு சாறு படி-ப2, நன்னாரி, எட்டிவேர், விலாமிச்சம் வேர், சந்தனம், மசிரம் இந்த அஞ்சு வகையுங் கியாழம் வைத்து படி-௰ நல்லெண்ணெய்-படி-1 இவைகளெல்லாங் கலந்து சூரிய புடம் ரெண்டு நாட்கள் வைத்து மிளகு, சீரகம், கோஉஷ்டம், லவங்கம், கிச்சிலிக்கிழங்கு, பச்சிலை, பிதிறரோகணி, ஏலம் வகைக்கு பலம்-௨ இடித்துப் போட்டு மெழுகு பதத்தில் காச்சி வைத்துக் கொண்டு எட்டு நாட்களுக்கு ஒருக்கால் தயிலந் தேய்த்து சீயக்காய் அவித்து வெந்நீர் விட்டு தேய்த்து முழுகவும். பித்தம் நாற்பதும் மாறிப்போம்.

வயிறு கடுப்புக்குச் சூரணம்

நாயுருவியிலை, ஆனைபிரண்டை, மாம்பட்டை, மிளகு, சாதிக்காய், நாகேசரம், மாச்சக்காய், அதிவிடையம், கரி, புளியங்கொட்டைத் தோல், சீரகம் வகைக்கு பலம்-௨ வஸ்திரகாயம் பண்ணி முன் சொன்ன மூனு வகையும் கரியாகச் சுட்டு அரைத்து ரெண்டும் சேர்த்து வைத்துக் கொண்டு வேளைக்கு மூவிரல் கொண்டு. எருமைத் தயிர் அமபது நாழிகை புளித்தது மருந்தைப் போட்டு ரெண்டு வேளையும் மூன்றுநாட்கள் அஞ்சு நாட்கள் கொடுக்கத் தீரும். கவிச்சு தள்ளிப் போடவும். காரைக் கீரை அத்திப்பிஞ்சு, பீக்கங்காய், புடலங்காய், கருணைக்கிழங்கு இவைகளைக் கூட்டி வரவும். எருமைத் தயிரில் பற்பாடகத்தைத் அரைத்துக் குழப்பி அஞ்சு நாட்கள் கொடுக்கத் தீரும். இச்சாபத்தியமாய் வரவேண்டியது.

சீதக்கழிச்சலுக்கு

பழவெங்காயச்சாறு படி-ஒரு, சீரகம், வெந்தயம், கடுக்காய்பூ, மாசக்காய், சுக்கு, நாகேசரம், லவங்கம், லவங்கப்பட்டை, மதுரம் இவைகளை வறுத்து வஸ்திரகாயம் பண்ணி வெங்காயச் சாத்தை கொதிக்க வைத்து பாகுபோலே காச்சி இறக்கி வைத்துக் கொண்டு தூளைப் போட்டுக் கிண்டி கல்கண்டு பலம்-4 பொடி பண்ணிப் போட்டு நெய் பலம்-3 கூட விட்டுக் கிண்டி வேளைக்கு கெச்சக்காய் பிரமாணம் ரெண்டு வேளையும் கொடுத்து வரவும். யிச்சாபத்தியம். முன்சொன்ன மருந்துகள் வகைக்கு பலம்- , புளித்த தயிர் வார்த்துக் கொள்ளலாம். கவிச்சு, கசப்பு திரி தள்ளிப் போட்டு வேண்டியது கூட்டினால் கழிச்சல் தீரும்.

வேறு பசறியும், பச்சரிசி மாவும் அரைத்து எலுமிச்சங்காயளவு மூன்று நாட்கள் தின்னவும். தீரும்.

வேறு

நாயுருவி இலையும் புழுங்கல் அரிசியும் அரைத்துக் கரைத்து நாட்டுச் சக்கரையும் நெய்யும் கலந்து களிக்கிண்டி வேளைக்கு எலுமிச்சங்காயளவு மூன்று நாட்கள் தின்னவும். மூன்று நாட்கள் ரெண்டு வேளையும் தின்னவும். தீரும். பத்தியம் - கவிச்சு, கசப்பு தள்ளிப் போடவும். இவைகளை பக்குவமாயறிந்து கொடுக்கவும். மூலவாய்வு, ரெத்தக் கழிச்சல் எல்லாம் தீரும். கைகண்டது.

கிறாணி கழிச்சலுக்கு

முள்ளிலவம்பட்டை, நாகப்பட்டை, மகிடம்பட்டை, சீரகம், அதிவிடையம், கரி வகைக்கு வேளைக்கு பலம்-2 சியாழம் பத்து மூன்று நாட்கள், அஞ்சு நாட்கள் ரெண்டு வேளையும் குடுக்கத் தீரும். பத்தியமாய் வரவேண்டியது. கட்டுத்திவாதியுண்டை வைக்கவும்.

வேறு புழுங்கலரிசியும் சீரகம், வெந்தயம் சமன் வேளைக்கு-பலம்-வ சட்டியில் போட்டு கருக்கி அரைப்படி தண்ணீர் வார்த்து வீசம்படியாகக் காச்சி

கரும்பா உரைத்து மூன்று நாட்கள் ரெண்டு வேளையும் கொடுக்கவும். பத்தியமாய் வரவேண்டியது. கவிச்சு ஆகாது. கிரகள், மூலவாய்வுகள், உஷ்ண வேதிகள் இவையெல்லாம் தீரும். கைகண்டது.

பெரும்பாட்டுக்கு லேகியம்

ஆவாரம்பட்டை-பலம்-10, முள்ளிலவம்பட்டை-பலம்-5, காரைவேர் பட்டை-பலம்-2, இவைகளைச் காய வைத்து வஸ்திரகாயம் பண்ணி நாட்டுச் சக்கரை பலம்-8, பசுவின் வெண்ணெய்-பலம்-3 இவைகளைப் பதமாய் லேகியம் பண்ணி வேளைக்கு புன்னைக் காயளவு பத்து நாட்கள் கொடுக்கவும். இச்சாபத்தியம்.

வேறு

ஆனை நெருஞ்சியிலையை நீராகாரத் தண்ணீர் விட்டு இடித்து சாறு பிழிந்து படி- சிங்கி பஸ்பம் பணவிடை போட்டு வேளைக்கு ரெண்டு வேளையும் அஞ்சு நாட்கள் ஒன்பது நாட்கள் கொடுக்கத் தீரும். கவிச்சு புளிப்புத் தள்ளவும். பெரும்பாடு, எரும்புருக்கி, மேகம் இவைகளெல்லாந் தீரும்.

ஏலாதிச் சூரணம்

திரிகடுகு, சாதிக்காய், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, தாளிசபத்திரி, ஏலக்காய், இருவேலி, நன்னாரி, வால்மிளகு, அன்னப்பூ, செண்பகப்பூ, தானிக்காய், நெல்லிமுள்ளி, கோஷ்டம், சடாமாஞ்சில், மஞ்சள், சீரகம், சோம்பு வகைக்கு பலம்-, வஸ்திரகாயம் பண்ணி வெள்ளைச் சக்கரை பலம்-7 கூடப் போட்டு வேளைக்கு மூவிரல் கொண்டது வியாதிகளறிந்து பத்து நாட்கள் பதினைந்து நாட்கள் தின்னவும். தேனில் நெய்யில் வெந்நீரில் புளித்த மோரில் கொடுத்து வர வாதஙகள் பித்த வாய்வுகள், மார்நோவுகள், சுஞ்சல், இருமல், பீளை சுரம், உஷ்ணவாய்வு, அக்கினி மாந்தம் இவைகளெல்லாந் தீரும்.

ஏலாதிச் சூரணம்

திரிகடுகு, சாதிக்காய், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, தாளிசபத்திரி, ஏலக்காய், இருவேலி, நன்னாரி, வால்மிளகு, அலிஞ்சிப்பூ, செண்பகப்பூ, தாணிக்காய், நெல்லிமுள்ளி, கோஷ்டம், சடாமஞ்சள், சீரகம், சோம்பு வகைக்கு பலம்- வஸ்திரகாயம் பண்ணி வெள்ளைச் சக்கரை பலம்-7 கூடப் போட்டு வேளைக்கு மூவிரல் கொண்டது வியாதிகளறிந்து பத்து நாட்கள் பதினைந்து நாட்கள் தின்னவும். தேனில் நெய்யில் வெந்நீரில் புளித்த மோரில் கொடுத்து வர வாதங்கள் பித்த வாய்வுகள், மார்நோவுகள், கழிச்சல், இருமல், பீளை சுரம் உஷ்ணவாய்வு, அக்கினி மாந்தம் இவைகளெல்லாந் தீரும்.

ஏழு சாஸ்திரி சூரணம்

சீரகம், சோம்பு, புடுத்துக்கால் சோம்பு, சுருள் லவங்கப்பட்டை, அதிமதுரம், கருஞ்சீரகம், கொத்தமல்லி வகைக்கு பலம்-4 வஸ்திரகாயம் பண்ணி கல்கண்டு பலம்-8 பொடி பண்ணி கூடச் சேர்த்து வேளைக்கு மூவிரல் கொண்டது. தின்னவும். விழமை, பித்தபாண்டுவம், சோகை, மார்னோவு, வாதரோகங்கள், பித்தரோகங்கள், மேகம், மேகவாய்வுகள், வயறு உப்பிசம், வயிறு இரைச்சல், கழிச்சல், அக்கினிமாந்தம், அரோசிகம், ஒக்காளம், வாய்நீர் ஊறல், வாய்கசப்பு, தித்திப்பு, வாய் உப்புகரிப்பு, புளித்தேப்பம் இவைகளெல்லாந் தீரும். இச்சா பத்தியமாய் வரவும். தீரும்.

சிவனார் வேம்புத் தயிலம்

சிவனார் வேம்பு வேர்-துக்கு-3 பொடியாய்த் தரித்துப் பானையில் போட்டு அடியில் கதிர்ச்சில்லி பண்ணி அடியில் குகை வைத்து மண்பூசி மேலே எருமுட்டை அடுக்கி செகபுடம் போட்டு ஆறவிட்டு எடுத்து வைத்துக் கொண்டு பொரிமாவில் சக்கரையில் தேனில் பாலில் துட்டிடை வேளைக்கு கொடுக்க மேகங்கள், பிடிப்புகள், சூலைகள், புண், கிரந்திகள், கட்டிகள், மேக ஊறல், பித்தவெட்டை, சொறிசிரங்கு, விதி வாதரோகங்கள், கைகால் குடைச்சல், தொடைவாதம்,

மேகச்கூடு, அசாத்தியங்களெல்லாம் தீரும். கை கண்டது. அவிழ்தம் பத்தியம் - வியாதிகளறிந்து பத்தியம் வைக்க வேண்டியது. தீரும்.

மதனகாமேசுர லேகியம்

நீர்முள்ளிவிரை, முள்ளிக்காய்விரை, அகத்திவிரை, பொன்னைகத்திவிரை, மருள் ஊமத்தம் விரை, முருங்கை விரை, பூனைக்காலி விரை, கலியாண முருக்கன் விரை, மஞ்சிலிக்காஸ்விரை, முசிளம் விரை, நாயுருவி விரை, வில்வத்திரி விரை, தேத்தாங் விரை, பாலைவிரை, வெட்பாலை விரை, ஆத்தா விரை, வெள்ளரிவிரை, அழிஞ்சிவிரை, முருக்கன்விரை, எலுமிச்சம் விரை, நாரத்தங் விரை ஆக வகை 21ம் வகைக்கு பலம்-1 வஸ்திரகாயம் பண்ணி சாதிக்காய்-பலம்-1, சாதிபத்திரி-பலம்-வ, லவங்கப்பூ-பலம்-வ, லவங்கப்பட்டை-பலம்- , அன்னிஅப்பூ-பலம்- , ககசா பலம்-1, திரிகடுகு-பலம்- சடாமாஞ்சில்-பலம்-வ, ரேணுகம்-பலம்-வ வஸ்திரகாயம் பண்ணி மதனகாமேசுரப்பூ-பலம்-1, கஞ்சா-பலம்-1, அபின்-பலம்-வ இவைகளை சுத்தி பண்ணவும்.

நெய்-பலம்-7, பசுவின் பால் படி-1, தேன்-பலம்-3, இவைகளெல்லாம் பதமாய் லேகியம் பண்ணிக் கொண்டு கெச்சக்காய் தூ சிவிளங்காய் பிரமாணம் சாப்பிடவும். மேகம்-21ம், வாதம் 84ம், பித்தம், சயம் இவைகளெல்லாந் தீரும். நல்ல சாப்பாடு சாப்பிடவும்.

தேங்காய் லேகியம்

தேங்காய்பெரிய காய்-1, சுக்கு, மிளகு, திப்பிலிகட்டை, சருஞ்சீரகம், ஓமம், லவங்கம், சீனப்பட்டை, ரோகணி, வசம்பு, பூண்டு வகைக்கு பலம்-வ, தண்டவாளம்-பலம்-1 சுத்தி பண்ணின வாளம்-பலம்- , இவைகளை தேங்காயிலே போட்டு வஉஸ்த்திரகாயம் பண்ணி முளையடித்த சாணி பூசி கோழிப்புடம் போட்டு எடுத்து வெல்லப்பாகு விட்டு அரைத்து வைத்துக் கொண்டு சகல வியாதிக்கும் கொடுத்து வரவும்.

தேங்காய் எண்ணை விரேசனம்

பெரிய தேங்காய்-4 திருகி மணத்தக்காளியிலை, முடக்கொத்தான், வெள்ளைச் சாட்டறணை சமூலம், சிறுகீரை சமூலம், இவைகளை விழுதாயரைத்து தேங்காய்ப் பூவில் பிசறி மூனுதரம் வெந்நீர் விட்டுப் பிசைந்து பால் விழுந்து சுத்தி பண்ணின வாளம்-பலம்-1¢வ, ரோகணி-பலம்- , ஓமம்-பலம்-வ, பூண்டு-பலம்-வ இவைகளை அரைத்துப் பாலில் போட்டு மெதுவாய் எரிய விட்டு கடுகு திரளக் காச்சி என்ணெயை இறுத்து வைத்துக் கொண்டு அஞ்சு துளி மூனு துளி நீராகாரத் தண்ணீரில், இளநீர்த் தண்ணீரில், சர்க்கரையில் குடிக்க பேதிக்கும் திரண்ட கடுகை தூதுவிளங்காய் பிரமாணம் வெல்லத்தில் கொடுக்க பேதியாகும். கட்டுகள் அறும். சகல வியாதியும் தீரும்.

ஆத்து தமட்டிக்காய் என்ணெய்

ஆத்து தமட்டிக்காய்-20, வரகு வைக்கோல் மேலே ஒன்றாய் சுத்திக் கொளுத்திப் போடவும். இடித்து சாறு பிழிந்து- சாறு படி-வ, துளசி, திருநீற்றுப்பச்சை, வல்லாரை வகைக்கு சாறு படி-ப, ஆமணக்கெண்ணெய் படி-1 ஒன்றாய்க் கலந்து சூரிய புடம் ரெண்டு நாள் வைத்து கருஞ்சீரகம், வசம்பு, வெள்ளைப்பூண்டு, ரோகணி, செம்புராம்பட்டை வகைக்கு பலம்-வ இடித்துப் போட்டு கடுகுதிரள் காச்சி வைத்துக் கொண்டு வியாதி அறிந்து பிள்ளைகளுக்கும் ஒரு கரண்டி கொடுக்கவும். மூன்று நாட்கள், அஞ்சு நாட்கள் வியாதிகளையறிந்து பத்தியம் வைக்கவும். மாந்தம், கரப்பான், கணமாந்தம் இவையெல்லாந் தீரும்.

பிள்ளைகளுக்குக் குருத்தி என்ணெய்.

விளக்கெண்ணை படி-1, சித்தாமணக்கெண்ணெய்-படி-வ, வில்வபத்திரி சாறு-படி-வ, புதுவெந்தயம்-பலம்-5 முப்பது நாழிகை ஊற வைத்து ஒன்றிரண்டாக உடைத்துப் போட்டு சூரியபுடம் ஒரு நாள் வைத்து சாதிக்காய் பலம்-, நுணுக்கிப் போட்டு அடுப்பில் வைத்து மெதுவாயெரித்து சலசலப்பு கண்டவுடனே இறக்கி

என்னெயை குடுவையில் - வீ - கோரோசனை போட்டு என்னையை சுட்டோ இறுத்து வைத்துக் கொண்டு காலமே ஒரு கரண்டி கொடுக்கவும். மூன்று நாட்கள் கொடுக்கவும். கன்னூடு, முகம் வெளுப்பு, நீர்க்கணம், இவைகளெல்லாந் தீரும். பத்தியம் வைக்கவும்.

மாந்த-என்னெய்

விளக்கெண்ணை-படி-1, துளசியிலை-வல்லாரை, நிணாயிலை, முடக்கொத்தான் வகைக்கு சாறு படி-¼ இவைகளை ஒன்றாய்க் கலந்து சூரியபுடம் ரெண்டு நாட்கள் வைத்து ஷதகரப்பான்பட்டை, சீக்கிராம்பட்டை, செம்பூரான் பட்டை, பரங்கிப்பிபட்டை, கருஞ்சீரகம், ஓமம், வசம்பு, பண்டு, கடுகுரோகணி வகைக்கு பலம்-வ இறுத்துப் போட்டு பதமாகக் காச்சி வைத்துக் கொண்டு காலமே ஒரு கரண்டி வார்க்கவும். போர்மாந்தம், கணமாந்தம், சுரம், இசிவு இவற்றிற்கு சாயங்காலம் வார்க்கவும். சுழிகன்ம், மாந்த சன்னி இவைகளெல்லாந் தீரும். முருங்கை ஈர்க்கு ஓமம் சியாழும் வைத்து வார்க்கவும்.

<u>கணமாந்தத்துக்குச் சூரணம்</u>

கரிசலாங்கண்ணி, கருந்துளசி, வல்லாரை, கற்பூரவள்ளி, தவசிமுருங்கை சமன்கொண்டு நிழலுலர்த்தி ஒரு நாள் ராக்கோலம் காய வைத்து வஸ்திரகாயம் பண்ணி திரிகடுகு-சாதிக்காய்-லவங்கம்-ஓமம்/ - லவங்கப்பட்டை-சீரகம்-கருஞ்சீரகம்-நாகேசரம்-சீமை ஓடு, கரி வகைக்கு பலம்- வஸ்திரகாயம் பண்ணி ரெண்டும் ஒன்றாய்க் கலந்து சர்க்கரை, தேன், நெய், வெந்நீரில், முலைப்பாலில் வியாதிகளறிந்து மூவிரல் கொண்டது. கொடுக்கவும். கணமாந்தம், சோகை, மந்தம், வாந்தி, விக்கல், இசிவு சுரம், வீக்கம், விரைவாதம், இளம்பிள்ளைவாதம் இவைகளெல்லாந் தீரும்.

<u>சுழிகனத்துக்கு</u>

பிரண்டை, கரிசிலாங்கண்ணி, பீனாறிசங்கு, கலியாண முருக்கிலை, நாயுருவி சமூலம், ஏமன் வசம்பு, மிளகு, மஞ்சள், ஆமையோடு, பெருங்கிழங்கு,

வகைக்கு பலம்¯ , இவைகளை சரியாய் கூட்டு நேச அரைத்து திரிகடுகு, கருஞ்சீரகம், லவங்கம், சாதிக்காய், லவங்கப்பட்டை, நாய்க்கடுகு, கண்டதிப்பிலி, அரத்தை வகைக்கு பலம்- , வஸ்திரகாயம் பண்ணி ரெண்டுமொன்றாய்ச் சேர்த்து தேனில் முலைப்பாலில், சக்கரையில், நெய்யில், வெந்நீரில் கொடுக்கவும். வியாதிகள் அறிந்து அநுபானத்தில் கொடுக்கவும். சுழிசுணம், சுழிமாந்தம், நீர்கணம், வறள்கணம், மாந்தம், போர்மாந்தம், இசிவுகள் இவைகளெல்லாம் தீரும்.

<u>பிள்ளைகளுக்கு ஊதுகாமாலைக்கு</u>

பிரங்கி குரு-பலம்-5 நாகல்பட்டை சாறு விட்டுச் சாமமரைத்து வில்லை தட்டி காய வைத்து ஓட்டில் வைத்து சோழிப்புடம் போடவும். எடுத்து கல்வத்தில் போட்டு கையாந்தகரைச் சாறு விட்டு அரைத்து மூணுபுடம் போடவும். திரிகடுகு, லவங்கம், சாதிக்காய், ஏலக்காய், லவங்கப்பட்டை, சீரகம், கருஞ்சீரகம், ஓமம், சம்புராஊந்டம் வகைக்கு பலம்-வ வஸ்திரகாயம் பண்ணி பஸ்பம் பணவிடையும் மூணு பணவிடை சூரணமும் தேனில், சக்கரையில், கையாந்தகரைச் சாத்தில், முலைப்பாலில், வெந்நீரில் ஏழு நாட்கள் அஞ்சு நாட்கள் கொடுக்கவும். காமாலை, சோகை, மஞ்சள் காமாலை, ஊதுகாமாலை, வீக்கம் இவைகள் தீரும். இச்சா பத்தியமாய் வரவும். தீரும்.

<u>கணவீக்கத்துக்கு</u>

தவசிமுருங்கை சமூலம், ஓமம், ரெண்டுங் சியாழமாகக் காச்சி அஞ்சு பொழுதுக் குடுக்கவும். இச்சாபத்தியம்.

<u>வேறு</u> கொஞ்சி, வல்லாரை, துளசி, உப்பிலிக்கொடி, ஆடாதோடை, திராயி சமூலம், ஓரிலைத் தாமரை, நாயுருவியிலை இவைகளை பானையில் சமனாய் போட்டு ஓமமும் போட்டு ரெண்டு படி தண்ணீர் வார்த்து காச்சி அரைப்படி இருக்க அஞ்சு பொழுது ரெண்டு வேளையும் கொடுக்கவும். இச்சாபத்தியமாய் வரவும். வீக்கங்கள், கணசோகைகள், மஞ்சள் காமாலை, இவைகளெல்லாந் தீரும். தலை முழுக விளக்கெண்ணெய் தேய்த்து முழுகவும். தீரும்.

வேறு

கலியாண முருக்கிலை சாந்தை முறித்து தேன் கலந்து மத்தித்துக் கொடுக்கவும். கணம் தீரும்.

உலோக பஸ்பம்

அரபொடி-பலம்-10 எலுமிச்சம் பழச்சாறு விட்டு சாமமரைத்து தண்ணீர் விட்டு கழுவிப் போட்டு சின்ன உழக்கில் போட்டு நீர்மேல் நெருப்புச் சாறு விட்டு ஒரு சீலை மண் செய்து முழப்புடம் போடவும். கல்வத்தில் போட்டு முள்ளிலவம் பட்டைச்சாறு விட்டு சாமமரைத்து வில்லையாய்த் தட்டி காய வைத்துப் புடம் போடவும். கத்தாழை மடல் விட்டு அரைத்து மூன்று புடம் போடவும். பஸ்பமாம். வெண்ணையில், நெய்யில், சர்க்கரையில் திரிகடுகு பொடியில் பணவிடை போட்டுச் கொடுக்கவும். இருமல், வாய்வு, காசம், க்ஷயம், ஈளை, உடல் இளைப்பு, சுவாசம், மேக வாய்வு இவைகளெல்லாந் தீரும். மற்றும் வியாதியறிந்து கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம்.

தாம்பூர பஸ்பம்

தாம்பூரம்-பலம்-10 உருக்கி நீர்மேல் நெருப்புச் சாத்தில் மூன்று தரம் சாய்க்கவும். பிற்பாடு ஓலைச் கனத்துக்கு தகடு தட்டி உப்பும் செங்கல் மாவும் அரைத்து சோழியும் அடுக்கி மேலும் கீழுந் தகடு வைத்து புடம் போட்டு ஆறினபோது ஆகாசகெருடன் கிழங்கு அரைத்து கவசம் கட்டி மேலே லெச்ச கட்ட இலை சுத்த முழ புடம் போட்டு எடுத்து கல்வத்திலே போட்டு அமுவுதாயிலைச் சாறு விட்டு அரைத்து வில்லை தட்டி காய வைத்து ரெண்டு புடம் போடவும். பஸ்பமாம். வைத்துக்கொண்டு மேகங்களுக்கெல்லாம் அரைப்பணவிடை பஸ்பம் வெண்ணையில் கொடுக்க தீராத வியாதிகள் தீரும். எல்லா ரேகங்களுக்குங் கொடுக்கலாம்.

நவநீத வெண்ணை

கோவைக்கிழங்கு, ஆகாசகெருடன் கிழங்கு, சத்திசாட்டறணைக் கிழங்கு, சாரணைக்கிழங்கு, அமுக்கிராக் கிழங்கு, கோரைக் கிழங்கு, தண்ணிவிட்டான் கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு வகைக்கு பலம்-2 வில்லையாய் வெட்டி காயப் போட்டு வஸ்திரகாயம் பண்ணி திரிகடுகு-பலம்-1, திரிபலை-பலம்-1 இதையும் வஸ்திரகாயம் பண்ணி ரெண்டுமொன்றாய்ச் சேர்த்து பசுவின் வெண்ணெய் பலம்-10 சட்டியில் போட்டு உருக்கி சூரணத்தைப் போட்டுச் சிண்டி லேகியமாய்க் கிளறி வைத்துக் கொண்டு மூவிரல் கொண்டது. ரெண்டு வேளையும் கொண்டு வரவும். இதுக்குத் தீரும் வியாதி - மேகங்கள், எலும்புருக்கி, மேகம், இருமல், சுவாசம், காசம், இரைப்பு, வாதரோகங்கள் இவைகளெல்லாந் தீரும். இச்சாபத்தியமாய் வரவும்.

மேக வாய்வுக்குப் பூச மருந்து

வெள்ளை குங்கிலியம்-பலம்- , பளிங்கு சாம்பிராணி-பலம் - பெருங்காயம்-பலம்-கு, கோழிமுட்டை வெள்ளைக் கருவிட்டு சாமமரைத்து நோகிற இடங்களிலே பூசவும். மூன்று நாட்கள் பனிசேயுண்டை காலமே தின்னவும். பேதிக்கும் இறைச்சி கூட்டின சாப்பாடு கொடுக்கவும். மேக வாய்வு, குடைச்சல், சூலைகள், பிடிப்புகள் தீரும்.

வேறு

வரகுகப்பி, மிளகு, பளிங்கு சாம்பிராணி இவற்றை சுத்தாழஞ் சாத்தில் அரைத்து கொதிக்க வைத்து பாகுபோலே காச்சி நோகிற இடங்களில் பூசவும். இப்படி அஞ்சு நாட்கள் மூன்று நாட்கள் பூச மேக வாய்வுகள், பித்த வாய்வுகள், சூலைகட்டு இவையெல்லாம் தீரும். வாய்வு பண்டமாகாது.

நவரெத்தின செந்தூரம்

ரெத்தினங்கள் கொண்டு வந்து சாமைக் காடியில் முப்பது நாட்களூற வைத்து கல்வத்தில் போட்டு நருக்கி தூளாக்கி நெரிபாகலிலைச் சாறு விட்டு அரைத்து வாரி சின்ன உழக்கில் போட்டு சில்லிட்டு சீலைமண் செய்து கெசபுடம்

..76..

போடவும். ஆறின பிறகு கல்வத்தில் போட்டு திராய்ச்சாறு விட்டு சாமமரைத்து மூறுபுடம் போடவும். பிறகு சத்தாழை மடல் வேர் சாறுவிட்டு சாமமரைத்துப் போடவும். ஆறினபிறகு கல்வத்தல் போட்டு திராய்ச்சாறு விட்டு சாமமரைத்து மூறுபுடம் போடவும். பிறகு சத்தாழை மடல் வேர் சாறு விட்டு சாமமரைத்துப் புடம் போடவும். செந்தூரமாம். அரைப்பண எடை செந்தூரம் வேளைக்கு சக்கரை, தேன், நெய், வெண்ணையில் வியாதிகள் அறிந்து கொடுக்கவும். சகல ரோகங்களும் தீரும். நல்ல சாப்பாடு சாப்பிடவும்.

நேத்திர வாய்வுக்குத் தைலம்

நெய்ச்சுண்டியிலை, சிறுகீரை, வில்லபத்திரி, முசுமுசுக்கை, பொன்னாங்கண்ணி, ஓரிலைத் தாமரையிலை, கருந்துளசி, வகைக்கு படி-ப, நல்லெண்ணெய்-படி-1, இவைகளைக் கலந்து சூரியபுடம் ஒரு நாள் வைக்கவும்.

சந்தனம், இருவேலி, நன்னாரி, வில்வவேர் வகைக்கு பலம்-1 சின்னப் பானையில் போட்டு ரெண்டுபடி தண்ணீர் வார்த்து கால்படியாகக் காய்ச்சிக் கூட வார்த்து கோஷ்டம், மிளகு, சீரகம், மதுரம், பச்சிலை, கிச்சிலிக் கிழங்கு, பிதிர் ரோகிணி, ஏலம் வகைக்கு பலம்-வ நருக்கிப் போட்டு மெழுகு பதத்தில் காய்ச்சி வைத்துக் கொண்டு எட்டு நாட்களுக்கு ஒரு நாள் தலை முழுகவும். சிரசைப் பத்தின வியாதிகளெல்லாந் தீரும்.

சஞ்சீவி மாத்திரை

இருவி, நாபி, அரிதாரம், ரசம், கெந்தகம், அப்பிரகம், லிங்கம், வெங்காரம் வகைக்கு பலம்-ஏ சுத்தி பண்ணவும். சுத்தி பண்ணின வாளம்-பலம்-ஏ, மிளகு, சாதிக்காய், கோஷ்டம், வகைக்கு பலம்-வ இவைகளெல்லாம் கல்வத்தில் போட்டு கையாந்தகரைச் சாறு விட்டு ஏழுநாட்கள் ஏழு சாமம் அரைத்து குன்றிப் பிரமாணம் மாத்திரை திரட்டி நிழலுலர்த்தி காய வைத்துக் கொண்டு வியாதிகளை அறிந்து சர்க்கரை, இதன் இவைகளில் கொடுக்கவும். திரிகடுகுப்பொடி, முலைப்பால், பசுவின் பால், லவங்கக் கியாழத்தில், பஞ்ச

மூலக்கியாழத்தில் கல்கண்டு தூளில் கொடுக்க சகல ரோகங்களும் தீரும்.

பாம்பு விஷத்துக்கு பழச்சாத்தில் கொடுக்கவும். தீரும்.

<u>குரு பஸ்பம்</u>

இரசம், கெந்தகம், அண்ட ஓடு வகைக்கு பலம்-, சுத்தி பண்ணவும். கல்வத்தில் போட்டு குப்பைமேனிச்சாறு விட்டு ரெண்டு சாமம் அரைக்கவும். அரைத்ததை வில்லைதட்டி காய வைத்து அகலில் வைத்து மேலகல் கொண்டு மூடி மூனு சீலை மண் செய்து காய வைத்து குக்கிடபுடம் போட்டு எடுத்து வைத்துக் கொண்டு முலைப்பாலில் தேனில் கொடுக்க சன்னி, நாவரட்சி, சுரதோஷங்கள், சகல தோஷங்களும் தீரும்.

<u>நசியம்</u>

அடப்பம் விரையை முலைப்பாலில் அரைத்து நாசியில் காலமே வார்க்கவும். கபாலசூலை, சுக சன்னி, கழுத்து இசிவு, கபால வாய்வு, குத்தல் இவைகள் தீரும். மூன்று நாட்கள் நசியம் வார்க்கவும். தீரும்.

<u>அப்பிரகச் செந்தூரம்</u>

அப்பிரகம்-பலம்-10 காடியில் அஞ்சு தரம் காச்சி தோச்சுப் போடவும். சுத்தியாம். முருக்கன் சாத்தில் ஆறு புடம், மாதளம்பூச் சாத்தில் ஏழு புடம் ~~மேனிட்டு~~போடவும். ~~மாதளம்பூச்சாத்தில்/ஏழு~~ செந்தூரமாம். இதை மேகம் இருபத்தொன்றுக்கும் வெண்ணெய், தேன், சக்கரை, பசுவின் பால், வெள்ளாட்டுப் பால் இவைகளில் வியாதியறிந்து அரைப்பணவிடை செந்தூரம் பத்து நாட்கள், அஞ்சு நாட்கள் கொடுக்கவும். தீரும். இச்சாபத்தியம். சுவாச காசம், மூர்ச்சை, வாய்வு இவையெல்லாம் தீரும்.

<u>கற்பூர சலாசத்து பற்பம்</u>

கற்பூர சலாசத்து பற்பம் ஒரு கட்டியாய் பலம்-10, கற்சுண்ணாம்பு ஒலைக்களம் கட்டியின் பேரிலே பூசி காய வைத்து முழப்புடம் போட்டு பிறகு கல்வத்தில் போட்டு மணத்தக்காளிச் சாறு விட்டு சாமமரைத்து வில்லை தட்டி

..78..

காய வைத்துப் புடம் போடவும். எடுத்து வைத்துக் கொண்டு மேகங்களுக்கு பணவிடை பஸ்பம் வெண்ணெயில் கொடுக்கவும். நீர்க்கட்டு, நீரிழிவு, நீர் அருக்கல், நீர்ச் சோர்வை, எலும்புருக்கி, மேகம் இவைகளுக்கு கீழாநெல்லி, நெருஞ்சில், மணத்தக்காளி சீரகம் இவைகளைக் கஷாயம் வைத்து அஞ்சு நாட்கள், மூன்று நாட்கள் பணவிடை பஸ்பம் கொடுத்து வரவும் மேற்படி நோய்கள் தீரும்.

கோரோசனை உண்டை

சாதிக்காய், லவங்கம், லவங்கப்பட்டை, வால்மிளகு, சுரி சாதிபத்திரி, நன்னாரி, மாசக்காய், ஓமம், கருஞ்சீரகம், ஆமை ஓடு கரி, பெருங்கிழங்கு வகைக்கு பலம்-வ வஸ்திரகாயம் பண்ணி கல்வத்தில் போட்டு கைமாறா...த்திலைச்சாறு விட்டு ரெண்டு மணி நேரம் அரைத்து கோரோசனை விராகனிடை-ஃ கூடப் போட்டு முலைப்பால் விட்டு சாமம் அரைத்து குன்றி பிரமாணம் உண்டை பண்ணி நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு பிள்ளைகள் வியாதியறிந்து முலைப்பாலில், பச்சிலை சியாழத்தில் ஒரு உண்டை வைக்கவும். பெரியர்களுக்கும் யேக சுரத்துக்கு அநுபானத்தில் கொடுக்கவும்.

கோடா சூழி மாத்திரை

திரிகடுகு, திரிபாலை, லவங்கம், சாதிக்காய், ரோகணி வகைக்கு பலம்-வ வஸ்திரகாயம் பண்ணி சுத்தி பண்ணின வாளம் பலம்- , சுத்தி பண்ணின நாபி-பலம்-வ, பொரித்த வெண்காரம்-பலம்-வ, கொட்டாங்கச்சிக்கரி-பலம்- இவைகளை கல்வத்தில் போட்டு வேலிப்பருத்திச் சாறு விட்டு ரெண்டு சாமமரைத்து மிளகு பிரமாணம் உண்டை பண்ணி வைத்துக் கொண்டு வாத ரோகங்களுக்கு மிளகு வெத்திலை ரெண்டு உண்டை வைக்கவும். பேதிக்கு சுக்குக் கஷாயத்தில் ரெண்டு உண்டை வைக்கவும். பிச்சாபத்தியமாய் வரவும்.

ஊதகவாய்வு கழிச்சலுக்கு

நாயுருவியிலை அரைத்த விழுது மாங்காயளவு, இஞ்சி பலம்-2 சீரகம்-பலம்-1, லவங்கம்-பலம்- ஏ, சாதிக்காய்-பலம்-வ, மாசக்காய்-

பலம்-எ வட்டதிருப்பி-பலம்-வ, புளியங்கொட்டைத் தோல்-பலம்-வ.

புழுங்கலரிசி சிவக்க வறுத்து-பலம்-ஏ, அதிவிடையம் கரி-பலம்-ஞ இவைகளை அம்மியில் வைத்து நேக அரைத்து இரண்டுமொன்றாய்ப் பிசைந்து மூன்று அடை தட்டி பசுவின் நெய்-பலம்-10 சட்டியில் வார்த்து எரித்து அடையைப் போட்டு பொன்னிறமாகக் கருகாமல் எடுத்து கல்வுரலில் போட்டு தேன் பலம்-10 முறித்து விட்டு எடுத்து கெச்சக்காய் பிரமாணம் ரெண்டு வேளையும் பத்து நாட்கள் தின்னத் தீரும். சவிச்சு ஆகாது.

பித்த பிரமைக்குச் சூரணம்

முசுமுசுக்கை வேர், நன்னாரி, வெட்டிவேர், விலாமிச்சம் வேர், சந்தனம், மதுரம், வில்லப்பத்திரிவேர் வகைக்கு பலம்-1 வஸ்திரகாயம் பண்ணி எலுமிச்சம் பழம் இருபது சாறு பிழிந்து சூரணதில் பிசறி நிழலுலர்த்திச் காய்ந்த பிறகு யிஞ்சி-பலம்-10 இடித்து சாறு பிழிந்து சூரணத்தில் பிசறி நிழலில் காய வைத்து முசுமுசுக்கைச் சாத்தில் பிரட்டி காய வைத்து சுக்கு, மிளகு, சோம்பு, சீரகம், ஏலம், கொத்தமல்லி, புடுத்துக்கால் சோம்பு, நெல்பொரி, பொரித்த வெண்காரம் வகைக்கு பலம்-வ வஸ்திரகாயம் பண்ணி ரெண்டு வேளையும் மூவிரல் கொண்டது தின்று வரத் தீரும்.

பித்த குன்மத்துக்கு

வெள்ளெருக்கன் பூ காலமே அஞ்சு கசக்கி வெத்திலையில் வைத்து அஞ்சு நாட்கள் தின்னவும் தீரும். பேதியாம். பின்பு தும்பைப் பூவும் வெள்ளைச் சக்கரையும் ரெண்டு வேளையும் ஏழுநாட்கள் தின்னவும். பத்தியம்.

இஞ்சி-பலம்-5, மிளகு-பலம்-2, சீரகம்-பலம்-1வ, புடுத்துக்கால் சோம்பு-பலம்-ஏஞ, சாதிக்காய்-பலம்-வப லவங்கம்-ஏலம்-பலம்- மதுரம்-பலம்-1, கருவாப்பட்டை -பலம்-வ, சந்தனம்-பலம்-.. இஞ்சியைஅரைத்து மற்றதெல்லாம் வஸ்திரகாயம் பண்ணி ரெண்டுமொன்றாய்ப் பிசைந்து பெரிய அடையாய்த் தட்டி பசுவின் நெய்-பலம்-10 சட்டியில் வார்த்து அடையைப்போட்டு சிவக்க சுட்டு கற்கண்டு-பலம்-5, தேன்-பலம்-3 ..80..

இவைகளை உரலில் போட்டு இடித்து கெச்சக்காய் பிரமாணம் உண்டை பண்ணி பதினைந்து நாட்கள் தின்னவும். இச்சாபத்தியம். தீரும்.

அமுக்கிறாக்கட்டைச் சாறு படி-10, மணத்தக்காளிச் சாறு படி-ஒ, சற்பூரவள்ளிச்சாறு படி-ப , தண்ணீர்விட்டான் கிழங்குச் சாறு படி-ப செந்தாமரைச்சாறு படி-ஒ, பசுவின் நெய்-படி-1 கலந்து சூரிய புடம் வைத்து சாதிக்காய், லவங்கப்பட்டை, சீரகம், மிளகு, வால்மிளகு, நன்னாரி, சோம்பு வகைக்கு பலம்-வ, வஸ்திரகாயம் பண்ணி கல்கண்டு பலம்-4 சாறும் நெய்யும் கடுகு திரளக் காச்சி இறக்கி வைத்துக் கொண்டு மருந்துகளைப் போட்டு கிளறி வைத்துக்கொண்டு வேளைக்கு கால்பலமாகக் கொடுத்து வரத்தீரும். சாங்கை -களெல்லாந் தீரும்.

<u>மேகத்துக்குஆவாரை நெய்</u>

ஆவாரை வேர்ப்பட்டை பலம்-30 இடித்து பானையில் போட்டு நாலுபடி தண்ணீர் வார்த்து கால்படியாகக் காச்சி தென்னம்பாலை, வாழைப்பூ, வாழைக்கட்டை, புளியாரை, கருந்துளசி வகைக்கு சாறு ஆழாக்கு, சாதிக்காய், லவங்கம், லவங்கப்பட்டை. அமுக்கிறா, நன்னாரி, கோஷ்டம் சந்தனம், ஏலம், மசிரம், வில்வவேர் வகைக்கு பலம்-வ, பசுவின் நெய்-படி-1, சாறும் நெய்யும் கலந்து சூரியபுடமாக வைத்து மருந்தும் இடித்து கூடப் போட்டு அடுப்பில் வைத்து மெதுவாய் எரித்து பதமாய் இறக்கிவேளைக்கு கரண்டி கொடுக்கவும். பத்து நாட்கள் கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம்.

<u>காந்த செந்தூரம்</u>

காந்தம்-பலம்-10 கருமாவிலையில் காச்சி கள்ளுக் காடியில் மூன்று தரம் தோய்க்கவும். கல்வத்தில் போட்டு கையாந்தகரைச் சாறு விட்டு சாமமரைத்த இப்படிக்கு முப்பது புடம் போடவும். பிறகு மூணுபுடம் கைத்தாழ (கத்தாழை) மடல்வேர் சாத்தில் புடம் போடவும். செந்தூரமாம். அரைப்பணவிடை செந்தூரம் தேனில் கொடுக்கவும். சன்னிகள், மகோதரங்கள்,

நீர்கோர்வைகள், நீர்மைகள், வாதரோகங்கள் சகலமுந் தீரும்.

<u>இராமபாணக் குளிகை</u>

சுத்தி பண்ணின வெள்ளைப் பாஷாணம்-பலம்-1, சுத்தி பண்ணின வெள்ளைப் பாஷாணம் பலம்-1, காந்த செந்தூரம்-பலம்-5, சாதிக்காய்-பலம்-, லவங்கம்-பலம்-, பொரித்த வெண்காரம்-பலம்-வ ரெண்டு வகையும் வஸ்திரகாயம் பண்ணி யிவைகளை கல்வத்தில் போட்டு எருமைப்பால் விட்டு சாமம் அரைத்து பயிரளவு குளிகை பண்ணி நிழலலத்தி வைத்துக் கொண்டு லவங்கம், சுக்கு, லவங்கப்பட்டை வகைக்கு பலம்-ய வேளைக்கு கியாழம் வைத்துக் கொடுக்கவும். சன்னிவாதரோகங்கள், நாவரட்சி, விடாசுரம், மாரடைப்பு, மேல்சுவாசம், சூதக சன்னி இவைகளெல்லாந் தீரும். மூனு பொழுது கொடுக்கவும். ஆனபிலன் அறிந்து மருந்து கொடுக்கவும்.

<u>இலிங்கக்கட்டு</u>

உலர்ந்த லிங்கம் ஒரு கட்டியாய் பலம்-5, பழவெங்காயச் சாத்தில் ரெண்டு சாமம் சுருக்குக் கொடுத்த பின்பு உத்தாமணியிலைச் சாத்தில் ஒரு சாமம் சுருக்குக் கொடுக்கவும். பிறகு எரியாமணக்கன் பாலில் ரெண்டு சாமம் சுருக்குக் கொடுக்கவும். பிறகு கட்டி போட்டு மொழுக்காகும். அதை வைத்துக் கொண்டு சன்னிகள், வாத சுரங்கள், சிலேட்டும சுரங்கள், வாத ரோகங்கள், பித்த ரோகங்கள், சூதக சன்னி, வயிழைப்புகங்கள், இரைப்பு, வீக்கங்கள், கால் கை குத்தல் இவைகளெல்லாம் தீரும். பயிறளவு கொடுக்கவும்.

<u>தொண்டைப் புண்ணுக்கு</u>

கிரேமதாறது பலம்-1 பொடி பண்ணி பசுவின் பால் வேளைக்கு படி-வ காலமே பாலில் கொதிக்க விட்டு அரைப்பலம் தூளைப் போட்டு அரைக்கால் படியாகக் காச்சி வடிகட்டி கல்கண்டு தூள்-பலம்- கூடப் போட்டுக் குடிக்கவும். இப்படி மூன்று நாட்கள் ஒரு வேளை கொடுக்கவும்.

திரிகடுகு, சீரகம், சோம்பு, கொத்தமல்லி, புடுத்துக்கால் சோம்பு, மஞ்சிலிக்காய் விரை, வெள்ளரிவிரை, வெந்தயம், மதுரம் வகைக்கு பலம்-வ வஸ்திரகாயம் பண்ணி பச்சை நன்னாரி வேர்ப்பட்டை பலம்-5, தேத்தாங்கொட்டை பலம்-2,, சாதிக்காய்-பலம்-1 வஸ்திரகாயம் பண்ணி கல்கண்டு-பலம்-5, பசுவின் வெண்ணெய்-பலம்-7, பொரித்த வெங்காரம்-பலம்-1, நெல்பொரி-பலம்-1 இவைகளெல்லாம் லேகியம் போல் பதமாய் செய்து வைத்துக் கொண்டு பத்து நாட்கள் ரெண்டு வேளையும் தின்னவும். தீரும். இச்சாபத்தியமாய் வரவும்.

தொடை வாழைக்கு

வன்னியிலையை விளக்கெண்ணையில் வதக்கி அஞ்சு நாட்கள் ஒத்தடம் போடவும். வைத்துக் கட்டவும்.

ஆத்து சிமட்டிக்காய் என்னெய் மூன்று நாட்கள் கொடுக்கவும்.

வல்லைக் கட்டிக்கு என்னெய்.

அமிஞ்சிவேர், பரங்கிப்பட்டை, பிரப்பங்கிழங்கு, மிளகரணைவேர் இவைகளை கியாழம் வைத்து வகைக்கு பலம்-2 நாலுபடி தண்ணீர் விட்டு கால் படியாகக் காச்சி விளக்கெண்ணை படி-ஏ, முடக்கொத்தான் சாறு-படி-வ, விழுதிச்சாறு படி-ப , பிரமியப்பூண்டு சாறு படி-வ இவைகளையெல்லாம் ஒன்றாய்க் கலந்து சூரிய புடமாக மூன்று நாட்கள் வைத்து கருஞ்சீரகம், வசம்பு, பூண்டு, ரோகணி, சாதிக்காய், செம்பூரான் பட்டை, ஓமம் வகைக்கு பலம்-வ இடித்துப் போட்டு பதத்தில் கடுகுதிரளக் காச்சி வைத்துக் கொண்டு வேளைக்கு காலமே ஒரு கரண்டி கொடுக்கவும். அஞ்சு நாட்கள் ஏழு நாட்கள் கொடுக்கவும். சகல கட்டிகளும் கரைந்து போகும்.

விரைவாதத்துக்கு

வெள்ளெருக்கன்பு ஏழு கசக்கி வெத்திலையில் வைத்து காலமே தின்னவும். இப்படி ஏழு காலமே தின்னவும். பத்தியம் - கவிச்சு, புளிப்பு தள்ளிப் போடவும்.

கெச்சக்காய் பருப்பு, சிறுபருப்பு, சாளபருப்பு, கசகசா, பெருலவங்கப்பட்டை, லவங்கம், கோஷ்டம், சப்பல்சிவதை, சிறுதேக்கு, நாகேசரம், ரேணுகம் வகைக்கு பலம்-ஏ வஸ்திரகாயம் பண்ணி ஆலாத்தி கர்ப்பூரம் பலம் கூடப் போட்டு மூவிரல் கொண்டது பதினஞ்சு நாட்கள் ரெண்டு வேளையும் தின்று வரவும். சக்கரை, தேன் யிளவெந்நீரில் கொடுத்து வர சகல வாதங்களெல்லாந் தீரும்.

அக்கினி குமாரன்.

கருநாபி, மிளகு, வெங்காரம், லிங்கம், பூரம், மனோசிலை, இரதம், கெந்தகம், தாளகம் வகைக்கு பலம்-வ சுத்தி பண்ணவும். அப்பிரக செந்தூரம், காந்த பஸ்பம், கர்ப்பூர சலாசத்து பஸ்பம் வகைக்கு விராகனிடை-1 கல்வத்தில் போட்டு தேசிப்பழச்சாறு விட்டு அஞ்சு சாமமரைத்து குன்றிப் பிரமாணம் குளிகை பண்ணி வைத்துக் கொண்டு பதிமூன்று சன்னிக்கும் லவங்கக் கியாழத்தில் ஒரு குளிகை மூனு பொழுது கொடுக்கவும்.

நாவரட்சிக்கு- திரிகடுகு பொடியில் தேனில் வைக்கவும். சுக்கு கியாழத்தில் வைக்கவும். சகல சுரங்களும் தீரும். குன்மத்துக்கு யிஞ்சிச் சாத்தில் வைக்க சகல ரோகங்களும் தீரும். அனுபானமறிந்து கொடுக்கத் தீரும்.

அண்ட வாதத்துக்குச் சூரணம்

வில்வவேர், மிளகரணைவேர், சங்கம்வேர், அழிஞ்சிவேர், அமுக்கிறா, நன்னாரி, இருவேலி சிவதை, வெள்ளைச் சாட்டறணை வேர், வகைக்கு பலம்- வஸ்திரகாயம் பண்ணி திரிகடுகு, திரிபலை, சாதிக்காய், ஏலம், லவங்கம், லவங்கப்பத்திரி, தாளிசபத்திரி, குரோசாணி, ஓமம், லவங்கப்பட்டை, சடாமாஞ்சில், கஸ்தூரி மஞ்சள் வகைக்கு பலம்-வ வஸ்திரகாயம் பண்ணி ரெண்டும் ஒன்றாய் சேர்த்து வைத்துக் கொண்டு மூவிரல் கொண்டது வேளைக்கு வெந்நீரில் தேனில், சக்கரை வெள்ளாட்டுப் பாலில் கொடுக்கவும். விரைவாதம், அண்ட வாதம், விரையில் வீக்கம், விரையில் குத்தல் வாதரோகங்கள் எல்லாம் தீரும்.

சுசியான விரோசனம்

நிலையாவரை, சலாப்பூ, நபாற்பூ, கப்பல் சிவதை, கோஉஷ்டம் வகைக்கு பலம்-1 வஸ்திரகாயம் பண்ணி வைத்துக்கொண்டு மூவிரல் கொண்டது. வெள்ளைச் சக்கரை, தேனில், வெந்நீரில் கொடுக்க பேதியாகும். இறைச்சி காலதுக் கச்சி சாப்பாட்டில் வார்த்துக் கொண்டு சாப்பிடவும். சாயங்காலம் - சுக்கு, சீரகம், சியாழம் வைத்துக் கொடுக்கவும். வாதரோகங்கள் சிலேட்டும அதிசாரங்கள் இவைகள் மாறிப்போம். அன்டைக்குப் பத்தியமாய் வரவேண்டியது. இந்தப்படிக்கு மாதம் ஒரு விரோசனம் சாப்பிடவும்.. வியாதிகளும் பித்தங்களும் சேராசு தீர்ந்துபோம்.

மீன் விஷத்துக்கு

எட்டிவிரை, சொர்தளங்காய், காட்டுச்சீரகம், மருளுமத்தை விரை, இன்னாசியார் கொட்டை வகைக்கு பலம்- ,ஆத்து தமட்டிக்காய்ச் சாறு விட்டரைத்து மிளகு பிரமாணம் உண்டை பண்ணி வைத்துக் கொண்டு மீன் விஷங்கண்டால் வேப்பெண்ணையில் ஒரு உண்டை உரைத்து உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கு குப்பைமேனியிலைச் சாத்தில் உரைத்துத் தடவவும். பத்தியம் - கஞ்சி காச்சி வார்க்கவும். இப்படி மூன்று நாட்கள் அஞ்சு நர்ட்கள் செய்யவும். ஆறாம் நாள் ஒமமரைத்து தலை முழுக வார்க்கவும். தீரும்.

மூல வாய்வினாலே ரெத்தக் கழிச்சலுக்கு

நாயுருவியிலை அரைத்த விழுது மாங்காயளவு தண்ணிமிட்டான் கிழங்கு மாங்காயளவு, புளியாரை அரைத்த விழுது மாங்காயளவு, காட்டுக் கருணைக்கிழங்கு மாங்காயளவு, இஞ்சியரைத்த விழுது மாங்காயளவு இவைகளை ஒன்றாய்ப் பிசைந்து மூன்று அடை தட்டி பசுவின் வெண்ணெய் பலம்-10 சட்டியில் போட்டு அடையை பொன்னிறமாகச் சுட்டு கல்வத்தில் போட்டு நாட்டுச் சக்கரை பலம்-8 போட்டு இடித்து வேளைக்கு புன்னைக்காயளவு பத்து நாட்கள் தின்ன மூலவாய்வு, ரெத்தக் கழிச்சல், ...இவைகளெல்லாம் தீரும். இச்சா பத்தியமாம்.

சன்னிக்கு அநுபானம் - லவங்கம், பெருலவங்கப்பட்டை, கோஷ்டம் வகைக்கு பலம்.... சியாழம் வைத்து அவிழ்தங்கள் வைக்கவும்.

மஞ்சள்-பலம்-7 இடித்து சட்டியில் போட்டு நெருப்பாக போக விட்டு தண்ணீர் விட்டு சியாழங் காச்சி அவிழ்தம் கிண்டிக்கவும்.

முருங்கை வேர்ப்பட்டை வசுத்து சித்திரமூலம், சிவனார் வேம்பு, லவங்கம், கருஞ்சீரகம் வகைக்குரெண்டு வேளையும் பலம்-வ சியாழம் வைத்து அவிழ்தம் வைக்கவும்.

நாயுருவி, மிளகு, மஞ்சள் வகைக்கு பலம்-வ சியாழம் வைத்து அவிழ்தம் வைக்கவும்.

நாயுருவி, மிளகு, மஞ்சள் வகைக்கு பலம்-வ நெருப்பாக்கி சுக்கு, லவங்கம், கருஞ்சீரகம் கூடப் போட்டு சியாழம் வைத்து அவிழ்தம் வைக்கவும்.

இந்தப்படி சன்னிகளுக்கு வைத்துக் கொடுக்க ரோகந் தீரும்.

மதுமேகத்துக்கு மருந்தும் தயிலமும்

இரசத்தரை வேளைக்கு அரை விராகனிடை வெண்ணையில் குழைத்துக் கொடுக்கவும். பதினைந்து நாட்கள் ரெண்டு வேளையும் கொடுக்கவும். இச்சாபத்தியமாய் வரவும்.

பிறகு நாயுருவி வருஷத்து வேப்பம்பட்டை ரெண்டு ஹாக்கு முடுகுபுடம் போட்டு தயிலமிறக்கிக் கொண்டு ஆள் பிலனறிந்து அஞ்சு துளி ஏழு துளி பத்து துளி பசுவின் நெய் விட்டு ரெண்டு வேளையும் பத்து நாட்கள் கொடுக்கவும். பத்தியம். நல்ல சாப்பாடு சாப்பிடவும். தீரும்.

தலை முழுகத் தைலம்

கையாந்தகரை, பொன்னாங்கண்ணி, சிறுகீரை வகைக்கு சாறு படி-ஞு, நல்லெண்ணை படி-, ரெண்டுங் கலந்து சந்தனம், கோஷ்டம், சீரகம், மிளகு, மதுரம் வகைக்கு பலம்-ப தூள் பண்ணிப் போட்டு காச்சி வடித்து தலைக்குத் தயிலம் தேய்த்து முழுகி வரத்தீரும்.

எலும்புருக்கி மேகத்துக்கு

பருத்திக்கொட்டை தூக்கு-1 முப்பது நாழிகை ஊற வைத்து இடித்த சாறு படி-வ, வில்லபத்திரிச் சாறு படி-ப கற்பூரவள்ளிச்சாறு படி-ப, ஓரிலைத் தாமரைச்சாறு-படி-ப, வெள்ளிண்டுச் சாறு படி-ப , முள்ளிலவம்பட்டைச் சாறு படி-வ, பசுவின் நெய் படி- இவைகளைக் கலந்து சூரியபுடம் முப்பது நாழிகை வைத்து அடுப்பில் வைத்து சாறு சுண்டக் காச்சி சாதிக்காய் பலம்-வ, லவங்கம்-பலம்-வ, நாகேசரம்-பலம்-வ வஸ்திரகாயம் பண்ணி பனைவெல்லம் பலம்-5 இவைகளைக் கூடப் போட்டு பாகம் போலே பண்ணி வைத்துக் கொண்டு வேளைக்கு வேளைக்கு சின்னக் கரண்டியாலே காலமே ஒரு கரண்டி கொடுக்கவும். சாயங்காலம் சிங்கி பஸ்பம் பணவிடை போட்டுக் கொடுக்கவும். இப்படி பத்து நாட்கள், பதினைஞ்சு நாட்கள் கொடுக்கத் தீரும். மேகங்களெல்லாந் தீரும். இச்சாபத்தியமாய் வரவும்.

நீர்கட்டுக்கு உப்பு மருந்து

வெண்காரம், சவுக்காரம், நாகேசரம், பொட்டிலுப்பு, படிக்காரம், இந்துப்பு, சவுட்டுமண் வகைக்கு பலம்-1 கல்வத்தில் போட்டு சாமமரைத்து சூரிய புடமாக வைத்து அரைத்து வில்லை தட்டி காய வைத்து ஓட்டில் வைத்து மேலும் ஓடு மூடி மூன்று சீலைமண் செய்து கோழிப்புடம் போடவும். கற்பூர சலாசத்து கட்டியாய் பலம்-5 கல் சுண்ணாம்பு ஓலைக்கனம் பூசிக் காய வைத்து முழபுடம் போடவும். எடுத்து ரெண்டுமொன்றாயரைத்து வைத்துக் கொண்டு பணவிடை நெருஞ்சிக் கியாழம், நெல்லி, சீரகம் கியாழம் வைத்து அஞ்சு பொழுது கொடுக்கவும். நீர்க்கட்டு, நீர்ச்சுருக்கல், நீர்சுருக்கு, வாதங்கள், வாய்வு குன்மம் இவைகள் தீரும். பத்தியமாய் வரவும்.

சூதக வாய்வுக்கு

பத்து மிளகு, திப்பிலி மூலம், வேலிப்பருத்தியிலைச் சாறு விட்டு அரைத்து குழப்பிக் கொடுக்கத் தீரும்.

மணத்தக்காளியிலை திசால் (கஷாயம்) காச்சி ஆழாக்கு இறுத்து உப்பு மருந்து பணவிடை மூன்று நாட்கள் கொடுக்கவும்.

ஆடாதொடையிலையும் சீரகமும் சியாழம் வைத்து மூன்று நாட்களுக்கு உப்பு மருந்து போட்டு கொடுத்து வரவும்.

நீர்முள்ளியிலையும் ஆனைநெருஞ்சியிலையும் சீரகமும் சியாழம் வைத்து மூன்று நாட்கள் கொடுத்து வரவும்.

பசரியிலையும் வெள்ளரி விரையுங் சியாழம் காச்சி அஞ்சுபொழுது பணவிடை பொரித்த வெங்காரம் பொடி செய்து போட்டுக் கொடுத்து வரவும்.

கால் பிடிப்புக்கு

வெள்ளருகு இலையும் சாதிக்காயும் பூண்டும் பரமும் வகைக்கு பலம்- அரைத்து கெச்சக்காய் பிரமாணம் உண்டை பண்ணி ஏழு நாட்கள் பதினாலு உண்டை கொடுக்கவும். பத்தியம் - கடும் பத்தியம் வைக்கவும். மறு பத்தியம் ஏழு நாட்கள் வைக்கவும். கைகால் பிடிப்பு, சூலைக்கட்டு, மேகவாதம், குடைச்சல் இவைகள் தீரும். ஒன்பது நாட்களுக்குப் பிறகு விளக்கெண்ணெய் தேய்த்து முழுகவும்.

பனிசை உண்டை மூன்று காலமே கொடுக்கவும். பத்தியம் - இறைச்சியுஞ் சாப்பாடுமாகக் கொடுக்கவும்.

வாய்வேக்காடு கண்டால் - புளியிலை, மாதளையிலை, பொடுதிலை, காச்சி மூன்று நாட்கள் கொப்பளிக்கவும். தீரும்.

வலிகளுக்கு

சித்திரமூலவேர், வெள்ளெருக்கன் வேர், அமிஞ்சிவேர், மலைவேப்பம் வேர், கொஞ்சிவேர், மிளகரணைவேர், சங்கம்வேர், வில்வவேர், குப்பைமேனி வேர், சிவதைவேர், நொச்சிவேர் காஞ்சது(காய்ந்தது) வகைக்கு பலம் 2 வஸ்திரகாயம் பண்ணி ரெண்டுமொன்றாய்ச் சேர்த்து வைத்துக்கொண்டு பூண்டுத்தைலம், முட்டைத் தைலம், வேப்பெண்ணெய் இவைகளில் மூவிரல் கொண்டது

குழப்பி ஐந்து நாட்கள், ஏழு நாட்கள், ஒன்பது நாட்கள் கொடுக்கவும். மேக வலிகள் தீரும்.

மருந்துகள் சுத்தி

வெள்ளைப் பாஷாணம் - கல்சுண்ணாம்பு கரைத்து தோலாய்ந்திரமாக பாஷாணத்தைக் கட்டி ரெண்டு சாமமெரிக்கவும். சுத்தியாம்.

செவுரி பாஷாணம் :- முலைப்பாலை கரண்டியில் வார்த்து பாஷாணத்தைப் பொடி பண்ணிப் போட்டு பால் சுண்ட எரித்தால் சுத்தியாம்.

சவ்வீரம் :- எருக்கன் பாலில் மூன்று நாட்கள் ஊற வைக்க சுத்தியாம்.

இலிங்கம் :- முலைப்பாலில் முப்பது நாழிகை ஊறவைக்க சுத்தியாம்.

நாபி - எருமைத் தயிரில் அவிக்க சுத்தியாம்.

நீறுவிஷம் - பசுவின் பாலில் அவிக்க சுத்தியாம்.

இருவி - பசுவின் கோமியத்தில் அரைத்த சுத்தியாம்.

சருநாவி - எருமைக் கோமியத்தில் மூனு நாழிகை அவிக்க சுத்தியாம்.

தாளகம் - சதிரக்கள்ளிப் பாலில் நாற்பது நர்ட்கள் வைக்க சுத்தியாம்.

கெந்தகம் - விளக்கெண்ணெயில் உருக்கிச் சாய்க்க சுத்தியாம்.

வெண்காரம் - பொரிக்கச் சுத்தியாம்.

இரதம் - செங்கல் மாவில் அரைக்கச் சுத்தியாம்.

மனோசிலை - தொண்ணூறு நாழிகை வெள்ளெருக்கன் பாலில் மூன்று நாட்கள் ஊற வைக்க சுத்தியாம்.

வாளம் - புளியிலையில் அவித்து நஞ்சு போக்கி பசுவின் பாலில் அவிக்க சுத்தியாம்.

கிருஷ்ன அப்பிரகம் - கஞ்சி காடியினில் மூன்று தரம் காய்ச்சித் தோய்க்க சுத்தியாம்.
